Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 76

வியாழக்கிழமை
10 பெப்ரவரி 2022

தை 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

**கொரோனா**
நேற்று 1,263
மொத்தம் 6,23,248

**உயிரிழப்பு**
நேற்று 36
மொத்தம் 15,692

# பயங்கரவாதத் தடைச்சட்ட திருத்தம் திருப்தியில்லை!

- ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு சுட்டிக்காட்டு
- சர்வதேச விதிகளுக்கு அமைய திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்து

கொழும்பு, பெப்ரவரி 10
சர்வதேச விதிகளுக்கு முற்றாக இசைந்துபோகும் வகையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான மேலதிக நடவடிக்கைகளை இலங்கை எடுக்க வேண்டும் – என்று ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.
15



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 'மக்கள் பேரணி' நேற்று அநுராதபுரத்தில் நடைபெற்றது. அதில் பெருமளவானோர் கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் கலந்துகொண்டிருந்தனர்.
கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, நாட்டை மீண்டும் மூடுவதற்கு இடமளிக்கவேண்டாம் என்று மக்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.
(ஏ–இ)




"கொரோனா வந்திட்டோ எண்டு டவுட் இருந்தால் பி.சி.ஆர், அன்டிஜென் எண்டு சோதனை செய்வம். இப்ப அதுகளுக்கே சோதனை எண்டால் என்ன செய்வம்?"

## இந்த ஆண்டின் இறுதிக்குள் மாகாணத் தேர்தல் அவசியம்

எதிரணி விடாப்பிடி



கொழும்பு, பெப்.10
இந்த ஆண்டுக்குள் மாகாணசபைத் தேர்தல் கட்டாயம் நடத்தப்பட வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.
15



## எறிகணை மீட்பு

யாழ்ப்பாணம், பெப்.10
அச்சுவேலி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில் நேற்று வெடிக்காத நிலையில் இருந்த எறிகண்ணை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.
15

## யாழ். போதனாவில் பி.சி.ஆர். நிறுத்தம்!

யாழ்ப்பாணம், பெப்.10
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வெளிநாடுகளுக்குச் செல்வோருக்கு மேற்கொள்ளப்பட்டுவந்த பி.சி.ஆர். பரிசோதனை மறு அறிவித்தல்வரை நிறுத்தப்பட்டுள்ளதுஎன்று அறிவிக்கப்
15

## தமிழ்த் தேசியக் கட்சிகளின் அரசியல் கருத்தரங்கு


யாழ்ப்பாணம், பெப். 10
இந்தியப் பிரதமருக்கான கடிதத்தை அனுப்பிய 6 தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் பங்குபற்றும் அரசியல் கருத்தரங்கு நாளைமறுதினம் சனிக்கிழமை, சட்டநாதர் வீதியிலுள்ள இளங்கலைஞர்
15

## கிளிநொச்சி மாவட்டத்தில்- அன்டிஜென் பரிசோதனை தொகுதிக்குத் தட்டுப்பாடு

கிளிநொச்சி, பெப்.10
கிளிநொச்சி மாவட்டத்தில் அன்டிஜென் பரிசோதனை தொகுதிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாத நிலைமை உள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.
15

## பாரவூர்தியுடன் மோதி முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப்.10
கோண்டாவில் சந்தியில் நேற்றுக்காலை நடந்த விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
கோண்டாவில் எம்.எஸ். வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பு சண்முகராசா (வயது-73) என்ற முதியவரே உயிரிழந்துள்ளார்.
15



## கஞ்சா நபர் யாழில் கைது

யாழ்ப்பாணம், பெப்.10
கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம், நாவந்துறையில் நேற்று ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்
15

## அரசின் பயணத்தை வீழ்த்த பல சக்திகள் முயற்சியாம்!

ஜனாதிபதி கோத்தாபய தெரிவிப்பு



கொழும்பு, பெப்.10
இந்த அரசை வீழ்த்துவதற்கு, பயணத்தை தடுப்பதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சக்திகள் முயற்சிக்கின்றன. எனவே, போலிப் பரப்புரைகளில் ஏமாற வேண்டாம். எம்மீது நம்பிக்கை வையுங்கள். இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார். ஸ்ரீலங்கா பொதுஜன
15

## ஈ.பி.எவ், ஈ.ரி.எவ். வரி விதிப்பு: தொழில் அமைச்சும் எதிர்ப்பு!

கொழும்பு, பெப்.10
ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் வரி அறவிடும் யோசனையை இறைவரி ஆணையாளர் முன்வைத்திருந்தபோதிலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அதை நிராகரித்தேன் என்று தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.
எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றில் நேற்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்
15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்களுக்கிடையில் முரண்பாட்டை தோற்றுவிக்க இராஜதந்திர நகர்வா?

## டக்ளஸிடம் சார்ள்ஸ் எம்.பி. கேள்வி



**கொழும்பு, பெப். 10**

**தமிழக மீனவர்களுக்கும், வடக்கு தமிழ் மீனவர்களுக்கும் இடையில் முரண்பாடுகளை தோற்றுவிப்பதற்கான இராஜதந்திர நகர்வு முன்னெடுக்கப்படுகின்றா? இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம், கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன்.**

நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சார்ள்ஸ் நிர்மலநாதன்;

இந்திய இழுவைப் படகு தொடர்பில் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் இதே நாடாளுமன்றத்தில் உங்களிடம் கேள்வி எழுப்பினேன். அப்போது இன்னும் இரண்டு மாதங்களுக்கு பிறகு இழுவைப்படகு பிரச்சினை இருக்காது எனவும், அதற்கான தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் நீங்கள் கூறினீர்கள். ஆனால் இன்று 2022 பெப்ரவரி மாதமாகியும் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. தற்போதும் அதே போன்றதொரு உறுதிமொழியை வழங்கியுள்ளீர்கள்.

இன்று கடற்றொழிலுக்குச் செல்பவர்கள், சடலங்களாக திரும்பும் நிலைமை காணப்படுகின்றது. வடக்கு மீனவர்கள் அச்சமின்றி தொழிலுக்குச் செல்ல முடியுமா? இந்தியாவின் தமிழக மீனவர்கள் மற்றும் வடக்கு தமிழ் மீனவர்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கான இராஜதந்திர நகர்வு முன்னெடுக்கப்படுகின்றாதா?' என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ், வழமைபோல அரசியல் உள்நோக்கத்துடன்தான் இதை முன்வைத்தீர்கள். உங்களுடைய நல்லாட்சியில் நீங்கள் எதையும் செய்யவில்லை. எங்களுடைய ஆட்சியில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் வழிநடத்தலில், பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் வழிகாட்டலுடன் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்போம் - என்றார். (ஒ-44)

# ஓடி ஒளிகிறார் பஸில் ராஜபக்ச

## எதிர்க்கட்சிகள் சீற்றம்

கொழும்பு, பெப். 10


நாடாளுமன்றத்துக்கே நிதி அதிகாரம் இருக்கின்றது. ஆனாலும், அதி உயர் சபைக்கு பொறுப்புக்கூறும் விதத்தில் நிதி அமைச்சர் செயற்படுவதில்லை. இதனால் நாட்டில் என்ன நடக்கின்றது என்பது தெரியாதுள்ளது என்று எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஒழுங்குப்பிரச்சினையொன்றை எழுப்பிய அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு,

நாட்டின் நிலைவரம் தொடர்பில் அடுத்த நாடாளுமன்ற அமர்வின் போது இரு நாள்கள் விவாதம் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்துள்ளது. எனவே, அதற்கான திகதி கட்டாயம் ஒதுக்கப்பட வேண்டும்.

உண்மையில் நாடாளுமன்றத்துக்கே நிதி அதிகாரம் இருக்கின்றது. எனினும், நாட்டின் நிதி நிலைவரம் தொடர்பில் நிதி அமைச்சர் நாடாளுமன்றத்துக்கு எதனையும் தெரியப்படுத்துவதில்லை. இதனால் நாட்டில் என்ன நடக்கின்றது என்பது எமக்கும் தெரியாமல் உள்ளது.

அரசால் தற்போது முன்வைக்கப்பட்டுவரும் தர்க்கங்கள் போலியானவை என்பதை அமைச்சர் கம்மன்பிலவின் கூற்று உறுதிப்படுத்தியது. இந்த நெருக்கடி நிலைமைக்கு கொரோனாப் பெருந்தொற்று காரணமல்ல என்பதை அவர் விவரித்திருந்தார். உண்மை நிலைவரத்தை நிதி அமைச்சர் தெளிவுபடுத்துவதில்லை - என்றார். (ஒ-44)



# ஐ.எம்.எவ். அறிக்கை சபையில் விவாதம்

## ரணில் கோரிக்கை

கொழும்பு, பெப்.10

இலங்கை தொடர்பான சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எவ்.) அறிக்கை இம்மாத இறுதியில் வெளிவரவுள்ளது. அது தொடர்பில் மார்ச் முதல் வாரத்தில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துவதற்கு நேரம் ஒதுக்கப்படவேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார். நாடாளுமன்றத்தில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

இலங்கையுடன் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடல்கள் தொடர்பான அறிக்கையை சர்வதேச நாணய நிதியம் இம்மாதம் மூன்றாம் வாரத்தில் வெளியிடவுள்ளது. அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இதுதொடர்பில் அரச கணக்குக் குழுவும் கவனம் செலுத்தக்கூடியதாக இருக்கும். அத்துடன், மேற்படி அறிக்கை தொடர்பில் மார்ச் முதல் வாரத்தில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துவதற்கு நேரம் ஒதுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த அரசாங்கமா அல்லது முன்னாள் அரசாங்கமா பொறுப்புக்கூற வேண்டும் என்பதைஆராய்வதைவிடவும், அறிக்கையில்உள்ள விடயங்கள் தொடர்பில் ஆழமாக விவா திக்கப்பட வேண்டும். இணக்கப்பாட்டுக்கு வரக்கூடிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். பொது இணக்கப்பாட்டுக்கு வந்த பின்னர் அது பற்றி ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தலாம் - என்றார். (ஒ-44)

# யாழ்ப்பாண கடற்றொழிலாளர்களின் போராட்டத்தில் குழப்பக்காரர்களாம்!

## நாடாளுமன்றில் டக்ளஸ் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 10

இந்தியக் கடற்றொழிலாளர்கள் விவகாரத்தில் ஏனையோர் போன்று பொறுப்பற்ற முறையில் ஏனோ தானோ என்று என்னால் கதையளக்க முடியாது என்று தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குழம்பிய குட்டையில் மீன் பிடிக்காமல். சிறப்பான திட்டங்களை முன்வைத்து உறுதியுடன் செயலாற்றி வருவதாகவும் கூறினார். அத்துடன் கடந்த 27 ஆம் திகதி பருத்தித்துறை வத்திராயனில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்ற நிலையில் உயிரிழந்த இரண்டு கடற்றொழிலாளர்களுக்கும் அவர் அஞ்சலி செலுத்தினார்.

மேலும், நீதிக்கான குரல்கள் ஒலிக்கட்டும் நியாயங்கள் வெல்லட்டும் என்றுதான் கேட்டுக்கொண்டதற்கு அமைய நீதிக்காக குரல் கொடுக்கும் கடற்றொழிலாளர்களின் கூடாரத்தில் அநீதியின் குழப்பக்காரர்கள் புகுந்துள்ளதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய எல்லை தாண்டிய சட்ட விரோதத் தொழில்முறைக்கு எதிராக நாடளாவிய ரீதியில் கடற்றொழிலாளர்கள் மேற்கொண்டு வருகின்ற போராட்டங்கள் தொடர்பாக நாடாளுமன்றில் நேற்று விசேட அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றும் போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஒ-இ)

# நிதி அமைச்சர் பஸில் சிறப்பாகச் செயற்படுகிறாராம்

## ஆளுங்கட்சி பாராட்டுப் பத்திரம்

கொழும்பு, பெப். 10

நாட்டின் பொருளாதாரம் வீழ்வதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச, மிகவும் சிறப்பாக திறமையுடன் நிதி அமைச்சை வழிநடத்துகின்றார் என்று ஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்லவால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கு பதிலளிக்கும் விதத்திலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

'ஜனவரி முதலாம் திகதி நாடு வங்குரோத்தடையும், இது தொடர்பில் நேரலையில் வந்து தகவல் வெளியிடப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதார வல்லுநர்கள் எனக் கூறிக்கொள்பவர்கள் சுட்டிக்காட்டினர். தூரநோக்கு சிந்தனையின்றி, தற்காலிக மகிழ்ச்சிக்காகவே அவர்கள் இவ்வாறு கருத்து வெளியிடுகின்றனர் என்பது தற்போது உறுதியாகியுள்ளது. நாட்டில் பொருளாதாரம் விழுவதற்கு நாம் இடமளிக்கமாட்டோம் - என்றார். (ஒ-44)

# பயங்கரவாதத் தடைச்சட்டம் திருத்தம்; சர்வதேசத்தை ஏமாற்றும் நாடகம்

## கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 10

சர்வதேச சமூகத்தை ஏமாற்றி, ஜெனிவாத் தொடரை சமாளிப்பதற்கும், ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளும் நோக்கிலுமே பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. மாறாக உண்மையான நல்லெண்ணமும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்ற எண்ணமும் அரசிடம் இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ், இது குறித்து தெரிவித்ததாவது:-

பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு மாற்றீடாக புதியதொரு சட்டவரைவு முன்மொழியப்பட்டுள்ளது. குறித்த புதிய முன்மொழிவானது, முன்பிருந்த சட்டத்தைப்போல்தான் உள்ளது. பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் சபை நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடாளுமன்றமும் இதனை வலியுறுத்தியுள்ளது. எனவே, சர்வதேசத்தை ஏமாற்றும் வேலையாகவே இவ்வாறானதொரு நகர்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகளை பாதுகாக்கும் வகையில் புதிய ஏற்பாடு அமையவில்லை.

அதேவேளை, தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் கரிசனையை தடுப்பதற்காகவா மீனவர் பிரச்சினை திட்டமிட்ட அடிப்படையில் கையாளப்படுகின்றது என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது- என்றார். (ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் புதுடில்லியில் கலந்துரையாடல்!

## வெளிவிவகார அமைச்சு அறிக்கை

**கொழும்பு, பெப். 10**

**இலங்கை- இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் புதுடில்லியில் இடம்பெற்ற வெளிவிவகார அமைச்சர்களின் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இலங்கையின் வெளிவிவகார அமைச்சு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் அனுப்பப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

இந்தியா- இலங்கை வெளிவிவகார அமைச்சர்களுக்கு இடையிலான சந்திப்பும், அதனைத் தொடர்ந்து பிரதிநிதிகள் மட்டத்திலான பேச்சும் பெப்ரவரி 7ஆம் திகதி புதுடில்லியில் உள்ள வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்றது.

இந்தியாவுக்கும்- இலங்கைக்கும் இடையிலான உறவு, பரிவர்த்தனை உறவில் இருந்து மூலோபாய பங்காளித்துவமாக பரிணமித்துள்ளமையை சுட்டிக்காட்டிய வெளிநாட்டு அமைச்சர் பீரிஸ், இலங்கை எப்பொழுதும் நம்பியிருக்கக்கூடிய உண்மையான நண்பன் இந்தியாதான் என்பதை இலங்கை மக்கள் அதிகளவில் அங்கீகரித்திருப்பதாகத் தெரிவித்தார். இந்த நிலையில், தற்போதைய நெருக்கடியான தருணத்தில் இந்திய அரசாங்கம் இலங்கைக்கு வழங்கியுள்ள 2.4 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை அமைச்சர் பீரிஸ் பாராட்டினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு எப்போதும் இலங்கைக்கு ஆதரவானதாக இருக்கும் என அமைச்சர் ஜெய்சங்கர் உறுதியளித்தார்.

பொருளாதார ஒத்துழைப்பு, வலு மற்றும் எரிசக்தி ஒத்துழைப்பு, இணைப்பு, மக்களுக்கிடையிலான தொடர்பு போன்றவை உள்ளிட்ட பரஸ்பர நலன் சார்ந்த பல்வேறு விடயங்கள் குறித்தும் இருதரப்புப் பேச்சுவார்த்தையின் போது கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையின் எரிசக்தி பாதுகாப்பு மற்றும் அண்மையில் கைச்சாத்திடப்பட்ட திருகோணமலை எண்ணெய்த் தாங்கிப் பண்ணை ஒப்பந்தம் குறித்தும் விசேட கவனம் செலுத்திய வெளிநாட்டு அமைச்சர் பீரிஸ், இது இரு நாடுகளுக்கும் இடையிலான நெருக்கமான ஒருங்கிணைப்பை எடுத்துக்காட்டுவதாகவும், அதனால் இரு நாடுகளுக்கும் வெற்றிகரமான சூழ்நிலையில் கணிசமான நன்மைகளை ஏற்படுத்துவதாகவும் குறிப்பிட்டார் - என்றுள்ளது. (ம)

## மீனவர்களை விடுவிக்கக் கோரி இராமேஸ்வரத்தில் போராட்டம்

இராமேஸ்வரம், பெப்.10

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 11 இந்திய மீனவர்களை விடுவிக்குமாறு கோரி, இராமேஸ்வரம் மீனவர்கள் தொடர் போராட்டத்தை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

இதனால் நாள் ஒன்றுக்கு இந்திய மதிப்பில் 10 கோடி ரூபா வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

800 க்கும் மேற்பட்ட படகுகள் கடலில் நங்கூரமிட்டுள்ளன. நாளை இராமேஸ்வரம் தொடருந்து நிலைய வளாகத்தில் மீனவர்கள் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். (ஒ-4, இ)






### சம்பள அதிகரிப்பு, நியமனம் கோரி

## முன்பள்ளி ஆசிரியர்கள் மன்னாரில் போராட்டம்

மன்னார், பெப்.10

முன்பள்ளி ஆசிரியர்கள் தமக்கான சம்பள அதிகரிப்பு மற்றும் நிரந்தர நியமனத்தை வழங்கக் கோரி, மன்னார் மாவட்டச் செயலகத்தின் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் மாவட்டத்தில் 400க்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் துறை சார்ந்த தகைமைகளை நிறைவு செய்துள்ளனர். மூன்று வருடங்களுக்கு மேலாக சம்பள உயர்வு மற்றும் நிரந்தர நியமனத்தைக் கோரி, ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர். எனினும் இதுவரை தீர்வு கிடைக்கவில்லை.

இந்த நிலையில் தற்போதைய வாழ்க்கைச் செலவை எதிர்கொள்ள வழங்கப்படும் கொடுப்பனவு போதாது. எனவே நிரந்தர நியமனத்தை வழங்குவதோடு, சம்பள உயர்வும் வழங்கப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் ஜனாதிபதிக்கான மனு, மாவட்டச் செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெலிடம் கையளிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். (ஒ-4,213)

## சமுர்த்தி சங்கத்தில் திருட்டு

யாழ்ப்பாணம், பெப்.10

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் மேற்கு பகுதியில் அமைந்துள்ள சமுர்த்தி சங்கம் ஒன்றில் திருட்டு நடந்துள்ளது என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இந்தத் திருட்டுச் சம்பவம் நடந்துள்ளது என்றும், 21 ஆயிரத்து 250 ரூபா பெறுமதியான பிளாஸ்டிக் கதிரைகள் திருடப்பட்டுள்ளன என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாட்டுக்கு அமைய கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர். (எ-125)




**கொரோனா** வந்த புசில, ஏதோ வேற கிரகத்தில இருந்து வந்த ஏலியனைப் பிடிச்ச மாதிரி, முகமூடியெல்லாம் போட்டுக் கொண்டு வந்து அம்புலன்ஸில ஏத்தி-ஆளைத் தொடாமல்- எங்கேயோ கண்காணாத காட்டுப்பக்கம் இருக்கிற ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய் அங்க தனியறைக்குள்ள வைச்சு தூர நிண்டு சாப்பாடு, மருந்து குடுத்து ஆயிரத்தெட்டு சோதனையெல்லாம் செய்து சுகம் வந்த பிறகும் வீட்ட விட்டு 14 நாள் வெளியில போகக் கூடாது எண்டு ஓர்டர் போட்டு வீட்டுக்காரரையும் தனிமைப்படுத்தி, ஊரைவிட்டு ஒதுக்கி வைச்சு எண்டெல்லாம் பெரும்பாடு பட்டிச்சினம். ஆனாப் பழகப் பழக பாலும் புளிக்குமெண்ட மாதிரி இப்ப கொரோனாவும் புளிச்சு, சலிச்சுப் போனதாலயோ என்னவோ முந்தி இருந்த அக்கறையும், அவதானமும், விழிப்புணர்வும் எங்களிட்ட அறவேயில்லை. மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுறேலை, அலட்சியமா இருக்கிறதால தான் கொரோனா பரவுது எண்டு வாய்கிழிய அறிக்கைவிடுகிற சுகாதாரத் தரப்புக் கூட, இப்ப கொரோனா எண்டா ஒரு பொருட்டாவே எடுக்கிறேலை.

கிட்டடியில யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில, ஒராளை 23 ஆம் வார்ட்டில அட்மிட் பண்ணினவை. அவருக்குப் பக்கத்தில வார்ட்டில இருந்த இன்னொரு வருத்தக்காரர் கடுமையா இருமிக்கொண்டு இருந்திருக்கிறார். புதிசா அட்மிட் ஆனவரின்ர வாய் சும்மாயிருக்காமல், வருத்தம்? காய்ச்சலோ? எண்டு கேட்டிருக்கிறார். அதுக்கு அந்த இருமல் பேர்வழி தான் முதல் வந்தது. இப்ப கொரோனா எண்டு முடிவு வந்திருக்கு எண்டு சொல்ல, புதிசாப் போனவருக்கு அடிவயிறு கலங்கி, 'வருத்தத்தை மாத்த ஆஸ்பத்திரிக்குப் போனால், இஞ்ச கொரோனாவை இலவசமாத் தந்திடுவாங்கள் போல கிடக்கே' எண்டு துண்டு வெட்டிக் கொண்டு வந்திட்டார்.

இப்பிடிச் சாதாரண வருத்தக்காரரோட கொரோனா வருத்தக்காரரையும் வைச்சிருந்தால் அது பரவுறதுக்கு இன்னும் சான்ஸ் கூடவெல்லோ. அதோட கொரோனா நிர்ப்பீடண சக்தி குறைஞ்ச ஆக்களிட்டத்தான் தன்ர வேலையைக் கூடுதலாக் காட்டும். ஏற்கனவே வருத்தமெண்டு வார்ட்டுகளில நிக்கிறவைக்குத் தொத்தினால் நிலைமை கவலைக்கிடம் தானே. இதைப்பற்றி ஒரு ரிப்போர்ட்டர் அங்க இப்ப பொறுப்பா இருக்கிற ஒரு டொக்டரிட்ட கேட்டிருக்கிறார். அதுக்கு அவர் என்ன செய்யிறது? அதோட எல்லாரும் இப்ப பூஸ்டர் போட்டுட்டினம் தானே. அதால கொரோனா தொத்தாது எண்டு மறுமொழி சொல்லியிருக்கிறார். கொரோனாவுக்கு முன்னால பூஸ்டர், மாஸ்டர் எல்லாம் வேலைக்காகாது எண்டு சாதாரண ஆக்களுக்கே தெரியும். ஆனால் மெத்தப் படிச்ச டொக்டர் பூஸ்டர் இருக்கப் பயமேன் எண்டு அலட்சியமாச் சொல்லுறார். அப்பிடியெண்டால் இனி பூஸ்டர் போட்ட எல்லாரும் மாஸ்குகளை கழட்டி எறிஞ்சு போட்டு, கூட்டம் கூட்டமா திரியலாமோ? பூஸ்டர் போட்டதால இனி இயல்பு வாழ்க்கை வந்திட்டோ? ஒண்டுமா விளங்குதில்லையே.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க இலங்கையை வலியுறுத்துக

## சர்வதேசத்தைக் கோருகின்றது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

கொழும்பு, பெப். 10

**ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட இலங்கையின் ஏனைய வர்த்தகப் பங்காளிகளும் நிதியுதவிகளை வழங்கும் நாடுகளும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாக இல்லாதொழிப்பதற்கு அவசியமான அழுத்தங்களை இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கவேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.**

'பயங்கரவாதத் தடைச்சட்டத்தைத் திருத்தியமைப்பதில் இலங்கை அரசாங்கம் அடைந்துள்ள தோல்வி' என்ற தலைப்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இலங்கை அரசாங்கம் நபர்களை நீண்டகாலமாகத் தன்னிச்சையாகத் தடுத்து வைப்பதற்கும் சித்திரவதைகளுக்கு உட்படுத்துவதற்கும் மிகமோசமான பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்துகின்றது.

எனவே ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கையின் ஏனைய வர்த்தகப் பங்காளிகளும் நிதியுதவிகளை வழங்கும் தரப்புக்களும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாக இல்லாதொழிப்பதற்கு அவசியமான அழுத்தங்களை இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கவேண்டும்.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்படும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீண்டும் பெற்றுக்கொண்டபோது பயங்கரவாதத்தடைச்சட்டத்தை இல்லாதொழிப்பதாகக் கடந்த அரசாங்கம் வழங்கிய வாக்குறுதியைத் தற்போதைய அரசாங்கம் நிராகரித்துள்ளது.

அவ்வாறு மறுப்பதன் ஊடாக அரசாங்கம் தாம் இலக்கு வைத்திருக்கக்கூடிய சில தரப்பினரின் அடிப்படை உரிமைகளை இல்லாமல் செய்வதற்காக அந்தச் சட்டத்தைப் பயன்படுத்துகின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் அரசாங்கத்தினால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் முன்மொழியப்பட்டிருக்கும் திருத்தங்கள் ஐரோப்பிய ஒன்றியத்தினதும் ஏனைய அரசாங்கங்களினதும் கரிசனைகளை சமாதானப்படுத்துவதை இலக்காகக் கொண்டவையாக அமைந்திருக்கின்றனவே தவிர, அவை அந்தச் சட்டத்தின் விளைவாக இடம்பெறும் மீறல்களையும் வன்முறைகளையும் முடிவுக்குக் கொண்டுவருவதாக அமையவில்லை.

1983 - 2009ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் இடையில் போர் இடம்பெற்றபோது தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் என்றும் அந்த அமைப்புக்கு ஆதரவளிப்பவர்கள் என்றும் சந்தேகிக்கப்பட்டவர்களுக்கு எதிராக அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தியது.

உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத் தாக்குதல்களைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான முஸ்லிம்களைத் தன்னிச்சையாகத் தடுத்து வைப்பதற்காகப் பயங்கரவாதத்தடைச்சட்டம் பயன்படுத்தப்படுகின்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தரவுகளின் பிரகாரம் கடந்த மூன்று ஆண்டுகளில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சுமார் 600க்கும் அதிகமானவர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்கள். அவர்களில் பெருமளவானோர் தடுப்புக்காவலில் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்கள்.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கை அரசாங்கம் அதன் சர்வதேசக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதை உறுதிசெய்வதற்கும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அர்த்தமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அவசியமான அழுத்தங்களை ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகியவை வழங்கவேண்டும் - என்றுள்ளது. (ம)

தேவாலயத்தில் கைக்குண்டு மீட்பு

# சந்தேகநபரொருவர் நேற்று விடுதலை!

கொழும்பு, பெப். 10

பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு கண்டெடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அந்தத் தேவாலயத்தில் பணியாற்றிவந்த 'முனி' என்ற நபரே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு நீதிவான் நீதிமன்றில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம)

மரக்கறி விற்பனை நிலையத்தில்

# துப்பாக்கி, வாள்களுடன் பணம், நகை கொள்ளை

கொழும்பு, பெப். 10

மரக்கறி விற்பனை நிலையமொன்றுக்குள் துப்பாக்கி மற்றும் வாள்களுடன் புகுந்த மூன்று பேரைக் கொண்ட கொள்ளைக் கும்பல், கடையின் உரிமையாளரை மிரட்டி பணம், நகை என்பவற்றை அபகரித்துச் சென்றுள்ளது.

தணமல்வில, வெல்லவாய வீதியில் பலஹருவ சந்திக்கு அருகிலுள்ள மரக்கறி விற்பனை நிலையமொன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த கொள்ளைக் கும்பல் வர்த்தக நிலையத்துக்குள் புகுந்து கொள்ளையில் ஈடுபடுவது அந்த விற்பனை நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராவில் பதிவாகியுள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

# சேதன உரத்தால் 75 வீதமே விளைச்சல்

முல்லைத்தீவு, பெப்.10



நெற்செய்கைக்கு சேதன உரத்தைப் பயன்படுத்தி, 75 வீதம் விளைச்சல் பெற்றுள்ளேன் என்று முல்லைத்தீவு விசுவமடுவைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக சேதன உரத்தைப் பயன்படுத்தி விவசாயத்தை மேற்கொள்ளும் விவசாயி மேலும் தெரிவிக்கையில்,

சேதன உர உற்பத்திக்கு பலவிதமான மூலப்பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றது.

காட்டுச் சூரியகாந்தி, வாழை, பூவரசு, மாவிலை, வேம்பு, கிழுசெரியா, வைக்கோல், சிறுதானியக்குழை வகைகள் மற்றும் கால்நடைகளின் கழிவுகள், குளத்தில் இருந்து பெறப்படும் பாசி வகைகள் உள்ளிட்டவற்றை நன்கு உலர வைத்து பின்னர் இயந்திரம் மூலம் அரைத்து, தேவையான அளவை வயல்களுக்கு விசிறக்கூடியதாக இருக்கும். உற்பத்தி செய்யப்படும் சேதன உரத்தை பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கு முன்னதாக நிலத்தில் இட்டு பயன்படுத்தினால் சிறந்த விளைச்சலைப் பெறமுடியும்.

பயிர்ச் செய்கையை மேற்கொண்ட பின்னர் விசிறுவதன் மூலம் எந்தப் பயனும் கிடைக்கப் பெறாது. நான் தயாரிக்கும் உரத்துக்கு அங்கீகாரமும் கிடைக்கப் பெற்றுள்ளது. நான் இரசாயன உரம் எதனையும் பயன்படுத்தவில்லை- என்றார். (ஒ-4,113)

# ஹிந்துத்துவா அமைப்புக்கு எதிரான போரால் மகிழ்ச்சி!

## முஸ்லிம் மேம்பாட்டு பேரவை அறிக்கை

கொழும்பு, பெப். 10

ஆர்.எஸ்.எஸ். ஹிந்துத்துவா அமைப்பினரின் ஹபாயா எதிர்ப்பு நிகழ்ச்சி நிரலுக்கு முஸ்லிம் பெண்கள் முன்வந்து பதிலளிப்பது பெருமையளிக்கிறது என்று கிழக்கு முஸ்லிம் மேம்பாட்டு பேரவை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அண்மைய நாள்களில் ஆர்.எஸ்.எஸ். ஹிந்துத்துவா அமைப்பினரின் ஹபாயாவுக்கு எதிரான நிகழ்ச்சிநிரல்கள் கடுமையாக்கப்பட்டுள்ளன என்பதை நாம் நன்றாக அறிவோம். அதிலும் குறிப்பாக இலங்கையிலும், இந்தியாவிலும் முஸ்லிம்களுக்கு எதிராக இவர்களின் செயற்பாடுகள் தீவிரமாக உள்ளன. இதனை எதிர்த்து தங்களின் ஆடைச் சுதந்திரத்தையும், கலாசார சுதந்திரத்தையும் வலியுறுத்தி தைரியமாக முன்வந்து போராடிய திருகோணமலை ஆசிரியை பஹ்மிதா, கர்நாடகாவில் அவர்களை எதிர்த்து உரத்து கொடுத்த முஸ்லிம் சகோதரிகள் இந்தக் காலத்தின் வீரப் பெண்மணிகளாக தங்களை நிரூபித்துள்ளனர்.

முஸ்லிம்களுக்கு ஆதரவாக தங்களை அடையாளப்படுத்திக்கொண்ட தமிழ் அரசியல்வாதிகளின் உண்மை முகம் வெளிவர ஆரம்பித்திருக்கும் இந்தக் காலகட்டத்தில் முஸ்லிம் சமூகம் தன்னைத்தானே சுயபரிசோதனை செய்து கொள்ளவேண்டியுள்ளது.

அப்பாவி மக்கள் போன்று ஏமாளிகள் பின்னாலும் கோமாளிகள் பின்னாலும் அடைக்கலம்தேடி அலையும் சமூகமாக முஸ்லிம் சமூகம் தன்னை அடையாளப்படுத்திக்கொள்வது இக்காலத்துக்கு ஏற்புடையதல்ல.

ஸ்ரீ சண்முகா வித்தியாலய ஹபாயா விடயத்தில் பல இந்து சகோதரர்கள் அவரவர் கலாசாரங்களைப் பின்பற்ற அவரவருக்கு உரிமையுண்டென ஆதரவுக் கருத்துக்கள் தெரிவித்தமை மகிழ்ச்சியாக இருந்தாலும் தமிழ்த் தலைமைகளின் மௌனமும், தமிழ் எம்.பிக்களில் சிலர் விடுத்த அறிக்கைகளும் அவர்களை தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடியவர்களுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களுக்கும் ஏமாற்றத்தை தந்துள்ளது.

எல்லோருக்கும் அரசமைப்பு வரையறுத்து கொடுத்த உரிமைகள் இருக்கின்றன. அதில் கைவைத்து சமூக நல்லிணக்கத்தை சீரழிக்க அனுமதிக்க முடியாது - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிசையில் நிற்பதைவிட திரவப்பாலுக்கு மாறுங்கள்

*அரசு ஆலோசனை*



கொழும்பு,பெப்.10

பால்மாவுக்காக வரிசையில் நிற்பதை விடுத்து, திரவப்பாலை மக்கள் கொள்வனவு செய்ய ஆர்வம் காட்டவேண்டும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாட்டில் மக்கள் பால்மாவைப் பயன்படுத்துவது ஒரு போதையாக மாறிவிட்டது. பால்மாவில் காணப்படும் தீங்கு விளைவிக்கும் பொருள்கள் தொடர்பில் பொது மக்களுக்குத் தெரிய வேண்டும்.

அதனை அறிந்தால் பால்மா பொதிகளைக் கொள்வனவு செய்வதற்கான வரிசைகள் குறையும். திரவப் பாலில் பல தெரிவுகள் உள்ளன. சவால்கள் மற்றும் பிரச்சினைகள் எவையாக இருந்தாலும், உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதிலேயே ஜனாதிபதி தொடர்ந்து கவனம் செலுத்துவார். இத்தகைய தீர்மானங்களை மக்கள் விரும்பாவிடிலும், பின்னணியில் உள்ள காரணங்களை எதிர்காலத்தில் புரிந்து கொள்வார்கள். பல மாற்று வழிகள் இருக்கும்போது, பால்மா தட்டுப்பாடு தொடர்பில் அரசு மீது குற்றஞ் சுமத்த வேண்டாம் - என்றார். (ஒ-4-இ)

## *2 வருடங்களில்* முகக்கவசத்துக்கு மட்டும் 18,000 கோடி ரூபா செலவு



**கொழும்பு,பெப்.10**

**இலங்கையில் கடந்த இரண்டு வருடங்களில் முகக்கவசங்களை கொள்வனவு செய்வதற்காக சுமார் 18 ஆயிரம் கோடி ரூபா பணத்தை மக்கள் செலவிட்டுள்ளனர்.**

இந்தத் தகவலை நுகர்வோர் விவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் வெளியிட்டுள்ளார். கொரோனாப் பெருந்தொற்று நிலைமை காரணமாக, மக்கள் அதிக பணத்தை முகக்கவசத்துக்காக செலவிட்டுள்ளனர். அதற்கமைவாக நாள் ஒன்றுக்கு 25 கோடி ரூபாவை செலவிடுகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள போதும், தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள அனைவரும் நாளாந்தம் முகக்கவசம் அணிய நேரிட்டுள்ளது. எனவே முகக்கவசங்களுக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பதன் மூலம், மக்களின் சுமையைக் குறைக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-இ)

## டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள் நியமனம் கோரி ஆர்ப்பாட்டம்

கொழும்பு,பெப்.10

டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள் சுகாதார அமைச்சின் அலுவலகத்தை முற்றுகையிட்டு நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சம்பள அதிகரிப்பு மற்றும் சேவையை நிரந்தரமாக்குதல் ஆகிய பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பு, விகாரமகாதேவி பூங்காவிலிருந்து ஊர்வலமாக, சுகாதார அமைச்சின் காரியாலயத்துக்குச் சென்று அங்கு தரையில் அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சம்பவ இடத்துக்கு பொலிஸார் வரழைக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. (ஒ-4-இ)



## போதைப்பொருள் கடத்தல்களை முறியடிப்பதற்காக வாகனங்கள்!

*இலங்கைக்கு ஜப்பான் அன்பளிப்பு*

கொழும்பு, பெப். 10

போதைப்பொருள் கடத்தல்களையும், பயங்கரவாதச் செயற்பாடுகளையும் முறியடிப்தற்கு இலங்கைக்கு ஒருதொகுதி வாகனங்கள் மற்றும் இதர உபகரணங்கள் ஜப்பானால் நேற்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் வைத்து ஜப்பான் தூதுவரால் ஜனாதிபதியிடம் இவை ஒப்படைக்கப்பட்டன. சுமார் 700 மில்லியன் ரூபா பெறுமதியான வாகனங்களும் உபகரணங்களுமே ஜப்பானால் இலங்கைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. (ம)

## ஐ.தே.கவின் அமைப்பாளராக சாகல ரத்னாயக்க நியமிப்பு



கொழும்பு,பெப்.10

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளராக, முன்னாள் அமைச்சர் சாகல ரத்னாயக்க நியமிக்கப்பட்டுள் ளார் என்று கட்சியின் பொதுச்செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் வழங்கப்பட்டுள்ள நியமனத்துக்கு, கட்சியின் செயற்குழுவும் ஒப்புதல் அளித்துள்ளது.

இதற்கு முன்னதாக இந்தப் பதவிக்கு நவீன் திஸாநாயக்கவை நியமிப்பதற்கு செயற்குழு தீர்மானித்திருந்தது. எனினும் அவர் அந்தப்பதவியை ஏற்க மறுத்ததன் காரணமாக, சுமார் ஒரு வருடமாக அந்தப் பதவி வெற்றிடமாகவே காணப்பட்டது. இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவராக கடமையாற்றியுள்ள சாகல ரத்னாய்க்கவை குறித்த வெற்றிடத்துக்கு நியமிப்பது குறித்து கட்சியின் செயற்குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டது. அந்தத் தீர்மானத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. அத்துடன் இரண்டு முக்கியமான வெற்றிடங்களுக்கு எதிர்வரும் காலங்களில் தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகள் இருவர் நியமிக்கப்படுவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

## 'சௌபாக்கியா' திட்டத்தால் வாழ்வாதார உதவிகள்

சாவகச்சேரி, பெப்.10

சமுர்த்தி திணைக்கள 'சௌபாக்கியா' வாழ்வாதாரத் திட்டத்தால் பொருளாதாரம் நலிவடைந்த தென்மராட்சி, சந்திரபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவுள்ளன.

அதன்படி தெரிவுசெய்யப்பட்ட 48 பயனாளர்களுக்கு மாடுகளும் 30 பயனாளர்களுக்கு ஆடுகளும் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை இந்தப் பகுதியிலுள்ள மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கான 4 இயந்திரங்களும் வழங்கப்படவுள்ளன. (ச-9)

## வங்குரோத்து நிலைமைக்கு விரைவில் தள்ளப்படும் நாடு

*சம்பிக்க எச்சரிக்கை*

கொழும்பு.பெப்.10

நாடு விரைவில் பல துறைகளில் வங்குரோத்து நிலைமையை எதிர்கொள்ளும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

உலகச் சந்தையில் எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்ட நிலையிலும், விசேட பெற்றோலுக்காக 60 தொடக்கம் 80 ருபா வரை வரியும், டீசலுக்கு 20 தொடக்கம் 30 ரூபா வரை வரியும் அறவிடப்படுகின்றது. மின்சார சபைக்கான டீசல் மற்றும் உராய்வு எண்ணெயின் விலை அதிகரித்துள்ளதால், இலங்கை மின்சார சபை பெரும் நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

24 மணித்தியாலங்கள் மின்சாரத்தை விநியோகிப்பதாக வழங்கிய வாக்குறுதியால், 85 வீதமாகக் காணப்பட்ட நீர் மின்னுற்பத்தி தற்போது 50 வீதமாகக் குறைவடைந்துள்ளது. வங்கிக் கட்டமைப்பு பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. வைப்பாளர்களுக்கு விநியோகித்த கடன்களில் 52 வீத கடன்களை அரசு பெற்றுக் கொண்டுள்ளது. ஏனைய வைப்பாளர்களுக்கு 48 வீதம் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளன. நாட்டில் பயன்படுத்தக் கூடிய டொலரின் அளவும் வெளிநாட்டுக் கையிருப்பின் அளவும் தொடர்ந்து குறைந்த மட்டத்தில் உள்ளது. முறையற்ற நிதி முகாமைத்துவத்தால் நாட்டின் நிதிக்கட்டமைப்புப் பாதிக்கப்பட்டுள்ளது - என்றார். (ஒ-4-இ)

## தபால் திணைக்களத்தில் ஊழியர்கள் பற்றாக்குறை

கொழும்பு,பெப்.10

தபால் திணைக்களத்தில் அலுவலகப் பொறுப்பதிகாரிகள் மற்றும் சாதாரண தபால் ஊழியர்கள் உள்ளிட்ட ஆயிரத்து 600 பேருக்கு ஆளணித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நாடு முழுவதும் 6 ஆயிரம் பேர் வரையில் தபால் ஊழியர்கள் தேவைப்படுகின்ற போதிலும், தற்போது 4 ஆயிரம் ஊழியர்களே சேவையில் உள்ளனர். 2018ஆம் ஆண்டிலிருந்து ஊழியர்களை இணைத்துக் கொள்வதற்கான அனுமதி கோரப்பட்டிருந்தாலும், இதுவரையில் அரசால் அதற்கான அனுமதி பெற்றுக்கொடுக்கப்படவில்லை.

எனினும் தற்காலிகத் தீர்வாக ஓய்வு பெற்ற தபால் அதிகாரிகள் 500 பேரை மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது. அந்த யோசனையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதனால் பெருமளவு தபால் காரியாலயங்களை மூடவேண்டிய ஆபத்து ஏற்பட்டுள்ளது. இந்த வருடத்தில் 900 கோடி ரூபா இலாபம் பெறும் எதிர்பார்ப்பையும் எட்ட முடியாது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள், எரிவாயு நெருக்கடி: சிறு வெதுப்பகங்களுக்குப் பூட்டு

யாழ்ப்பாணம்,பெப்.10

**எரிபொருள் விலை ஏற்றம் மற்றும் எரிவாயுத் தட்டுப்பாடு காரணமாக, எதிர்வரும் காலங்களில் சிறு வெதுப்பகங்கள் இழுத்து மூடப்படலாம் என்று யாழ்.மாவட்டக் கூட்டுறவு வெதுப்பகச் சங்கங்களின் ஊடகப் பேச்சாளர் கந்தசாமி குணரட்ணம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்:

எரிபொருள் விலையேற்றம் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக வெதுப்பக உற்பத்திப் பொருள்களைத் தயாரிக்கமுடியாது. அதனால் சிறு வெதுப்பகங்கள் இழுத்து மூடப்படும் நிலையும் உருவாகலாம். ஆரம்பத்தில் பிறிமா நிறுவனத்தால் விநியோகிக்கப்பட்ட கோதுமைமாவும் தற்போது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கோதுமை மாவின் விநியோகமும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பெரிய வெதுப்பகங்கள் ஓரளவு தமது தொழிலை முன்னெடுத்துச் செல்கின்றன. எனினும் சிறிய வெதுப்பகங்கள் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டுள்ளன. இவ்வாறான நிலைமை தொடர்ந்தால், எதிர்காலத்தில் சிறிய வெதுப்பகங்களை இழுத்து மூட வேண்டிய நிலை உருவாகும்.

அதேவேளை டீசல் விலையும் அதிகரித்துள்ளது. எரிவாயு விநியோகம் சீராகக் கிடைப்பதில்லை. விறகுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் ஒரு தீர்க்கமான முடிவை அரசு எடுக்கவேண்டும். இல்லையெனில் மக்கள் பாணைக் கூட வாங்க முடியாத நிலை ஏற்பட்டு, பஞ்சம், பட்டினி உருவாகும் - என்றார். (ஓ-4-23)

## தடைசெய்யப்பட்ட களைகொல்லிகள்: சந்தேகநபர் கைது



அநுராதபுரம்,பெப்.10

தடை செய்யப்பட்ட களை கொல்லிகள் மற்றும் அனுமதிப்பத்திரமற்ற பூச்சிக் கொல்லிகளை கப் ரக வாகனத்தில் ஏற்றிச் சென்ற சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து, அநுராதபுரம் பழைய பேருந்து நிலையத்துக்கு அருகில் வாகனம் மடக்கிப் பிடிக்கப்பட்டது.

வாகனத்திலிருந்து வெவ்வேறு வகையைச் சேர்ந்த பூச்சிக்கொல்லிகள் அடங்கிய 517 பைக்கற்றுகளும், க்ளைஃபோசெட் களைக் கொல்லி அடங்கிய 230 பைக்கற்றுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் புத்தளம், பாலாவி பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஏன்று தெரிவிக்கப்படுகின்றது. மேலதிக விசாரணைகளுக்காக அவர் அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஒ-4-இ)

## எரியூட்டப்பட்ட சார்ஜன்ட் சாவு!

காலி,பெப்.10

தீயில் காயமடைந்த பொலிஸ் பெண் சார்ஜன்ட் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் காலி, கோனாபினுவலப் பிரதேசத்தில் நடந்துள்ளது. சார்ஜன்ட் பலப்பிட்டி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

கோனாபினுவலப் பொலிஸ் நிலையத்தில் சார்ஜன்டாகப் பணியாற்றிய குறித்த பெண், பணிமுடிந்து வீடு திரும்பிய போது ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தில், கணவரால் எரியூட்டப்பட்டார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவத்தில் சிறு காயங்களுடன் சந்தேகநபரான கணவரும் பலப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-4-இ)



# எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பு பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு



கொழும்பு,பெப்.10

சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடித்தமையால், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க லிட்ரோ நிறுவனத்தின் பணிப்பாளர் சபை முடிவு செய்துள்ளது என்று இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

நாடாளுமன்றில் சபை ஒத்திவைப்பு வேளை கேள்வி நேரத்தின்போது எதிர்க்கட்சி உறுப்பினர் சமிந்த விஜேசிறி எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர் மேலும் தெரிவிக்கையில்:

சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்புநிலைமை தற்போது கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. அத்துடன் சமையல் எரிவாயு சந்தைக்கு தட்டுப்பாடின்றி விநியோகிக்கப்படுகின்றது. எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பால் இறந்த மற்றும் காயமடைந்தவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும்.

அதேவேளை எரிவாயுவை களஞ்சியப்படுத்த போதுமான வசதி இன்மையாலேயே, பாவனையாளர்களிடம் மேலதிகமாக 150 ரூபாவை பெறவேண்டி நேரிட்டுளது. லாப் மற்றும் லிட்ரோ கம்பனிகளுக்கு தேவையான சமையல் எரிவாயுவை ஒரே தடவையில் விநியோகிக்க நிறுவனமொன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டது. அந்தத் திட்டமும் பிற்போடப்பட்டுள்ளது- என்றார். (ஒ-4-இ)

# அதிக வீதித்தடைகளால் போக்குவரத்துக்கு தடை

முல்லைத்தீவு,பெப்.10

முல்லைத்தீவு வீதிகளில் 5கிலோ மீற்றருக்கு ஒரு வீதித்தடை போடப்பட்டுள்ளதால், போக்குவரத்தில் மக்கள் சிரமங்களை எதிர்கொள்வதுடன், விபத்துக்களும் அதிகரித்துள்ளன.



சில இடங்களில் இராணுவத்தினரின் வீதித்தடைகளுக்குள் பேருந்து தரிப்பிடங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில் திம்பிலி பகுதியிலும், றெட்பானாச் சந்திப்பகுதியிலும் இராணுவத்தினரின் வீதிச் சோதனைத் தடைக்குள் பேருந்து தரிப்பிடங்கள் காணப்படுகின்றன.

இதனால் மக்கள் இடர்களை எதிர்நோக்கி வருகின்ற போதும் தடைகள் தளர்த்தப்படவில்லை.

இந்தநிலையில் ஒட்டுசுட்டான் வீதியில் நேற்று முன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவர், மானுருவி பகுதியில் உள்ள இராணுவத்தினரின்வீதித்தடையில் மோதி விபத்துக்குள்ளானார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-19)

## வருடாந்த பொதுக்கூட்டம்

கொடிகாமம், பெப்.10

கொடிகாமம் வணிகர் மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தலைவர் சு.அருணாசலம் தலைமையில் கொடிகாமம் கச்சாய் வீதியில் அமைந்துள்ள வணிகர் மன்ற அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் அனைத்து வர்த்தகர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-159)

*சாவகச்சேரியில்*

## தராசுகளுக்கு முத்திரையிடல்

சாவகச்சேரி, பெப்.10

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களில் பாவிக்கப்படும் அளவை, நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணிகள் நேற்று தொடக்கம் நகரசபை வளாகத்தில் இடம்பெறுகின்றன.

அதன்படி மாவட்ட அளவைகள், நிறுவக அலகினரால் இன்று 10ஆம் திகதி, நாளை 11ஆம் திகதி மற்றும் 14ஆம் ஆம் திகதிகளில் முத்திரையிடப்படும் பணி இடம்பெறும் என நகரசபை செயலாளர் அறிவித்துள்ளார். (ச-9)

*நாடாளுமன்றத்தில்*

## ஆளும் தரப்பால் கெட்ட வார்த்தை

*எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டு*

கொழும்பு, பெப். 10

நாடாளுமன்றத்தில் விவாதங்களின்போது, எதிர்க்கட்சியினருக்கு எதிராக ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் தவறான வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றனர் என்று சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

குறிப்பாக பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களால், இவ்வாறான கெட்ட வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மயிலிறகால் தடவியது போதும்!

இலங்கை அரசியலில் , அதுவும் குறிப்பாக ஈழத்தமிழர் அரசியலில் இந்தியாவின் வகிபாகம் தவிர்க்க முடியாததும், தவிர்க்கப்பட முடியாததும் ஆகும். ஆனால் இந்தியா அந்த வகிபாகத்தை வைத்துக் கொண்டு ஈழத்தமிழர் நலன் சார்ந்து செயற்படுகின்றதா என்ற கேள்வி எழுப்பப்பட்டால் இல்லை என்பதே வெளிப்படையான பதில்.

இந்தியாவுடன் எல்லைப்புறத்தில் சீண்டிக்கொண்டிருக்கும் சீனா, இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்குச் சவால் விடும் வகையில் அதன் தென்கோடி மூலையில், தமிழர் தாயகத்தில் காலூன்றப் பார்க்கின்றது.

வடக்கு – கிழக்கு தமிழர் தாயகத்தை மையமாகக் கொண்ட தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் யாவுமே, இந்தியாவின் தேசியப்பாதுகாப்புக்கு தமிழர் தாயகத்தைப் பயன்படுத்தி சீனா சவால்விடுவதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், தமிழர் தரப்பின் பாதுகாப்புக் கவசத்தைப் பயன்படுத்தத் தயாரில்லை என்பதையே மீண்டும் மீண்டும் இந்தியா நிரூபித்துக் கொண்டிருக்கின்றது.

வடக்கு மாகாணத்துக்கு சீனத் தூதுவர் வந்து சென்ற பின்னணியில், வடமராட்சி மீனவர்கள் இருவர் இந்திய ட்ரோலர்களால் மூழ்கடிக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படும் நிலையில், தமிழக மீனவர்களுக்கு எதிரான போராட்டங்கள் வடக்கில் உச்சம் பெற்றுள்ளன. இந்த நிலையில், இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துமாறு தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதிய சூழலில், இந்திய மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர்களுக்கு இடையிலான சந்திப்பு புதுடில்லியில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் பல்வேறு விடயங்கள் பேசப்பட்டுள்ளன. இது தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில், ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கான சமத்துவம், நீதி, சமாதானம் மற்றும் கௌரவத்தை உறுதி செய்வதே இலங்கையின் நலனுக்கு உகந்தது. அதற்கு அதிகாரப் பகிர்வு முக்கியமானதாகும் என்று குறிப்பிட்டுள்ளது.

ஆனால், இந்தச் சந்திப்புத் தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட ஊடக அறிக்கையில் இந்த விடயங்கள் எதுவும் சொல்லப்படவில்லை. அதனை விட இந்தியாவில் வைத்து இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் கீழான 13ஆவது திருத்தத்தில் இந்தியாவின் வகிபாகம் தற்போது இல்லை என்று ஊடக நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் அதிகாரப் பகிர்வு தொடர்பில் இந்தியா எந்தவொரு அழுத்தங்களையும் பிரயோகிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தியா இப்போதும் இலங்கை அரசை நம்புகின்றது. இலங்கை அரசைக் குளிர்விப்பதன் ஊடாக, இலங்கையில் சீனாவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம் என்று நினைக்கின்றது. இலங்கையோ, சீனாவைக் காண்பித்து தனக்குத் தேவையானவற்றை இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொள்கின்றது. இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பில் இந்தியா தலையிட்டால் சீனாவை முன்னிறுத்தி அதிலிருந்து தப்பித்துக்கொள்ளப் பார்க்கின்றது.

இலங்கை விவகாரத்தில் இந்தியா இதுவரை காலமும் மென்போக்கிலேயே விடயங்களைக் கையாள்கின்றது. ஈழத்தமிழர் நலன், தனது தேசிய பாதுகாப்புக்கு எவ்வளவு தூரம் உறுதுணையானது என்பதைக் கூட கவனத்தில் எடுக்காமல் இலங்கையை இப்போதும் மென்போக்காக கண்டித்துக் கொண்டிருந்தால், வெகுவிரைவில் இந்தியாவின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான பகுதியாக தமிழர் தாயகத்தை சீனா மாற்றியமைக்கும். இதற்கான அத்திபாரங்களை சீனா ஏற்கனவே நட்டுக்கொள்ள ஆரம்பித்திருக்கின்றது.

இனியும் இந்தியா மயிலிறகால் இலங்கையைத் தடவிக்கொண்டிருக்காமல், தடி எடுத்து அதட்டி வழிக்குக் கொண்டுவருதலே இந்தியாவின் பூகோள நலன்களுக்கு பாதிப்பில்லாது அமையும்.ஏனெனில் சில சமயங்களில் அடி உதவுவது போல, அண்ணன் தம்பி உதவுவதில்லை.

நாளொரு நல்வார்த்தை

"நீ தனிமையில் இருக்கும்போது உனக்கு என்ன தோன்றுகிறதோ அதுதான் உன் வாழ்க்கையைத் தீர்மானிக்கும்."

-சுவாமி விவேகானந்தர்




### தமிழர்கள் விவகாரத்தில்

# எவ்வித அழுத்தத்தையும் இந்தியா வழங்கவில்லை!

### வெளிவிவகாரத்துறை அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, பெப். 10**

**வடக்கின் தற்போதைய நிலைவரம் தொடர்பிலும், தமிழர்களின் விடயம் தொடர்பிலும் எந்த அழுத்தத்தையும் இந்தியா வழங்கவில்லை - என்று தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

வடக்கின் தற்போதைய நிலைவரம் தொடர்பிலோ தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாடு தொடர்பிலோ எந்தவித அழுத்தத்தையும் இந்தியா வழங்கவில்லை. எம்மீது இந்தியா அழுத்தங்களைப் பிரயோகிப்பதாக சிலர் காண்பிக்க முயல்வதில் எந்தவித அடிப்படைகளும் இல்லை. அண்மையில் நான் நிதியமைச்சர் அலி சப்ரியுடன் வடக்குக்கு விஜயம் மேற்கொண்டு, அங்கு 3 நாள்கள் தங்கியிருந்ததுடன் பல்வேறு தரப்பினரையும் சந்தித்தேன். அப்போது அங்குள்ள மக்களைப் பொறுத்தமட்டில் கீழ்மட்டத்தில் எந்தவித விரோத மனப்பான்மையும் இல்லை என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது. தற்போது அதிகாரப்பரவலாக்கம் தொடர்பில் பேசப்படுகின்றது. ஆனால், கடந்த காலத்தில் வடமாகாண சபைக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. 13ஆவது திருத்தத்தின் ஊடாக மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்ற போதிலும், அந்தக் கட்டமைப்புக்களின் செயற்றிறனற்ற தன்மையினால் அதிகாரங்களை பயன்படுத்துவதில் குறைபாடுகள் காணப்படுகின்றன - என்றார். (ம)

# சீனாவுடனான எமது இணக்கம் இந்திய உறவைப் பாதிக்காது

### வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் உறுதி

கொழும்பு, பெப். 10

சீனாவுடனான தொடர்புகள் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நல்லுறவில் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாது - என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீனாவுடனான தொடர்புகள் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நல்லுறவில் எந்தவிதப் பாதிப்புக்களையும் ஏற்படுத்தாது. சீனாவின் ஒரு மண்டலம், ஒரு பாதை செயற்றிட்டத்தில் உள்ளடங்கும் ஒரு நாடாக இலங்கை காணப்படுகின்றது. அதேபோன்று இலங்கையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியை முன்னிறுத்திய சீனாவின் உதவிகளை நாம் பெரிதும் வரவேற்கின்றோம். இலங்கையின் கடற்பிராந்தியம் ஏனைய நட்பு நாடுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வகையில் எந்தவொரு தரப்பினராலும் பயன்படுத்தப்படக்கூடாது என்பதில் இலங்கை உறுதியாக இருக்கின்றது - என்றார். (ம)

நாளை 11.02.2022 வெள்ளிக்கிழமை தை 29

சுபநேரம் : 06.34 – 08.04
ராகுகாலம் : 11.04 – 12.34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விலையை உடன் அதிகரிக்கவும்!

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அரசாங்கத்திடம் கோரிக்கை



**கொழும்பு, பெப். 10**

**எரிபொருள் விலையை அதிகரிக்குமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ஏற்படும் நட்டத்தை குறைப்பதற்காக எரிபொருள் விலையை அதிகரிப்பது தற்போதைக்கு அவசியமானது என பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே விஜேசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படாத போதிலும் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்படும் என்ற நம்பிக்கை உள்ளது. லங்கா ஐஓசி எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை கொள்வனவு செய்த நபர்கள், சி.பி.சி. எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குச் செல்வதால், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ஏற்படும் இழப்பு அதிகரித்து வருகின்றது - என்றார். (ம)

## குற்றச்செயல்களில் ஈடுபட்டோருக்கு உளவள, மருத்துவ சிகிச்சை முகாம்

மன்னார், பெப்.10

மன்னாரில் சமூகமட்டத்தில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டோருக்கு உளவள மற்றும் மருத்துவ சிகிச்சை முகாம் நேற்றுமுன்தினம் அடம்பன் நந்தவம் உளவள சிகிச்சை நிலையத்தில் நடைபெற்றது.

இதில் சமூக மட்டத்தில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டவர்கள் நீதிமன்றிலிருந்து அழைத்துவரப்பட்டு உளவள ஆலோசனை, குடும்ப ஆலோசனை, மேற்பார்வை தொழில்பயிற்சி போன்றன வழங்கப்பட்டன.

சிகிச்சை முகாமில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ, மன்னார் நீதிமன்றத்தின் சமுதாய சீர்திருத்த திணைக்களத்தின் உத்தியோகத்தர், மன்னார் மருத்துவமனை உளவள உத்தியோகத்தர், மாந்தை மற்றும் முசலி பிரதேச பிரதேச செயலகங்களின் சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினர். (ச-213)

## இரண்டு மோ.சைக்கிள்கள் மோதியதில் மூவர் படுகாயம்

கொடிகாமம், பெப.10

இரண்டு மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து வேம்பிராய்ச் சந்தியில் பூதவராயர் கோவிலுக்கு அருகில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. கனகம்புளியடி வீதியூடாக மகளை ஏற்றிச் சென்ற தந்தை மோட்டார் சைக்கிளை வேம்பிராய் பூதவராயர் கோவிலுக்கு அருகில் வந்து டச்சு வீதிக்கு திருப்பியபோது அதே திசையில் இருந்து புத்தூர்ச்சந்தி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்து தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் (ச-159)

## ஒருங்கிணைந்த சுகாதார சேவை; முல்லைத்தீவில் அங்குரார்ப்பணம்

முல்லைத்தீவு,பெப்.10

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருங்கிணைந்த சுகாதார சேவை வழங்கல் செயற்றிட்டம், மாவட்ட பொது மருத்துவமனையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்தச் செயற்றிட்டம் ஊடாக மருத்துவ முகாம்கள் நடத்தல், வீதி விபத்து, பாலின அடிப்படை வன்முறை, குழந்தை துஷ்பிரயோகம் பற்றிய சுகாதார விழிப்புணர்வு பிரசாரங்களை நடத்தல், மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி, மும்மொழியில் மருத்துவமனை நுழைவுப் பலகை மற்றும் அறிவுறுத்தல் பலகைகள் அமைத்தல், மருத்துவமனையின் வரவேற்பு அறை, பதிவு அறை மற்றும் நோயாளர் விடுதி உள்நுழைவு பதிவு அறை போன்றவற்றை மேலும் மேம்படுத்தல், மும்மொழி சுகாதார கல்விச் சாவடி அமைத்தல், மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர் களின் உளவியல் நல்வாழ்வுக்கான, பொழுதுபோக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கல் ஆகியவை முன்னெடுக்கப்படும்.

நிகழ்வில் மருத்துவமனை நிர்வாகத்தினர், மருத்துவச் சங்கத்தினர் நிறுவனங்களின் திட்ட இணைப்பாளர்கள் கலந்து கொண்டனர். (ஒ-4,19)

## கம்மன்பிலவுக்கு எதிராக குட்டியாராச்சி போர்க்கொடி

கொழும்பு, பெப். 10

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு கொரோனாத் தொற்று மட்டும் காரணமல்ல என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்த கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சி நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி முன்னிலையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மின் உற்பத்திக்கான எரிபொருளை வழங்குவது சாத்தியமில்லை என எரிசக்தி அமைச்சர் ஒருவர் கூறவேண்டிய அவசியமில்லை. அதற்கு உரிய அமைச்சர்களே பொறுப்புக்கூற வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ம)

## கொரோனாத் தொற்றாளர்களுக்கும் நோயாளர் விடுதியிலேயே சிகிச்சை



யாழ்ப்பாணம்,பெப்.10

யாழ்.போதனா மருத்துவமனையில் ஏனைய நோயாளர் விடுதிகளிலேயே, கொரோனாத் தொற்றாளர்களுக்கும் சிகிச்சை வழங்கப்படுகின்றது.

இது தொடர்பில் மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி யமுனானந்தா தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்று தற்போது சமூக பரவலாக மாறி வருகின்றது. தற்போது அன்டிஜென் பரிசோதனைகள் குறைக்கப்பட்டுள்ளன. அரசின் சுற்றறிக்கைக்கு அமைவாக, காய்ச்சல் ஏற்பட்டின் 7 நாள்கள் வீட்டில் தனிமைப்படுத்த வேண்டும். இருப்பினும் நீண்ட நாள்கள் காய்ச்சல் உள்ளவர்களுக்கே, இங்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. கொரோனாத் தொற்றுக்குள்ளான 28 பேர் இங்கு உள்ள தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஏனைய தொற்றாளர்கள் மருத்துவமனையின் நோயாளர் விடுதிகளில் ஆங்காங்கே சில விடுதிகளில் சிகிச்சை பெறுகின்றனர். [illegible] தனிமைப் படுத்தல் விடுதியிலேயே சிகிச்சை பெறுகின்றனர்.

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும், ஏனைய நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகமாகக் காணப்படுகின்றது. எனவே சிகிச்சை பெற வருவோர் கட்டாயம் பூஸ்டர் தடுப்பூசி பெற்றிருப்பது அவசியம்- என்றார்.

இது தொடர்பில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவக் கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரனிடம் கேட்டபோது, மாகாணத்தின் எல்லக்குட்பட்ட மருத்துவமனைகளில் ஏனைய நோயாளிகளுடன், கொரோனாத் தொற்றாளர்களையும் தங்க வைத்து சிகிச்சை வழங்க வேண்டிய தேவை இதுவரை ஏற்படவில்லை- என்றார். (ஒ-4-125)

## பொதுக்கூட்டம்

கொடிகாமம், பெப்.10

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவைச் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளைமறுதினம் 12ஆம் திகதி யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்திக்கு அருகிலுள்ள புதிய உயர்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதன்போது அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவைச் சங்கச் செயலாளர் சந்தன சூரியாராய்ச்சி கலந்து கொள்வார்.

இதில் யாழ். மாவட்ட நிர்வாகத்தெரிவும் பயிற்சி முடித்து நியமனம் கிடைக்காதோர், சேவை உறுதிப்படுத்தல் கிடைக்காதோர், இடமாற்றம் தொடர்பான பிரச்சினைகள், அபிவிருத்தி உதவியாளராக இருந்து அபிவிருத்தி உத்தியோகத்தராக உள்வாங்கப்படாதோர், 2005 ஆம் ஆண்டுக்குள் முன் நியமனம் கிடைத்தும் தரம் 2 கிடைக்காதோர், போன்ற பல பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. (ச-159)

கட்சியைச் சூறையாட முனைந்தனராம்

## எண்மருக்கு எதிராக சங்கரி வழக்கு

கிளிநொச்சி, பெப். 10

உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்த முனைந்தமை, தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியின் ஆதனங்களைச் சூறையாட முனைந்தமை, அமைதிக்கு குந்தகம் விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைத்து எட்டுப் பேருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளார் ஆனந்தசங்கரி.

சட்டத்தரணி ஸ்ரனிஸ்லாஸ் செலஸ்ரின் மூலம் தாக்கல் செய்த இந்த வழக்கு, கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கை ஆராய்ந்த நீதிமன்றம் எதிராளிகளுக்கு எதிராக அழைப்புக் கட்டளையை விடுத்ததுடன், எதிர்வரும் 23ஆம் திகதிக்கு வழக்கைத் தவணையிட்டது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் உச்சப் பதற்ற நிலை

# இந்துத்துவா அமைப்புக்கு எதிராக முஸ்லிம்கள் போர்!

## ஜெய்சிறிராம் கோஷத்துக்கு போட்டியாக 'அல்லாஹு அக்பர்' என்றும் முழக்கம்!



கர்நாடகா, பெப். 10

**கர்நாடக மாநிலம் உடுப்பி அரசு கல்லூரியில் முஸ்லிம் மாணவிகள் ஹிஜாப், பர்தா, புர்கா ஆகியவை அணிந்து வர இந்துத்துவா அமைப்பினரால் தடை செய்யப்பட்டுள்ள நிலையில், அதற்கெதிராக முஸ்லிம் மாணவர்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளதால் அங்கு பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.**

ஹிஜாப் அணிய விதிக்கப்பட்ட தடைக்கு எதிராகவும், இந்துத்துவா அமைப்பின் சித்தாந்தங்களுக்கு எதிராகவும் 6 முஸ்லிம் மாணவிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்துத்துவா அமைப்பினர் காவி நிறத் துண்டு அணிந்து 'ஜெய் சிறிராம்' என கோஷம் எழுப்பிவரும் நிலையில், மாணவிகள் அவர்களுக்கு எதிராக 'அல்லாஹு அக்பர்' என்ற கோசத்தை எழுப்பி வருகின்றனர்.

கர்நாடகாவின் பாகல்கோட்டை, ஹாசன், மண்டியா, கோலார ஆகிய மாவட்டங்களிலும் போராட்டம் தீவிரமாகப் பரவியுள்ளது. அங்கு கலவரங்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் உள்ளன என்று சுட்டிக்காட்டப் படுகின்றது.

இதையடுத்து அடுத்த 3 நாள்களுக்கு கர்நாடகா மாநிலத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. பதற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவே இந்த அறிவிப்பு பாதுகாப்புத் தரப்பால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தீவிர இந்துத்துவா சித்தாந்தத்துடன் தொடர்புடைய ஆளும் கட்சியான பாரதிய ஜனதாவின் முக்கியஸ்தர்கள் ஜெய்சிறிராம் என்ற கோஷத்துடன் போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளனர். எதிர்க்கட்சியான காங்கிரஸும் ஏனைய சிறுபான்மை மதக் கட்சிகளும் காவிக் கொடிகளுடன் போராட்டத்தில் ஈடுபடுவோரைக் கண்டித்ததுடன் முஸ்லிம் மாணவர்களுக்கு ஆதரவாகக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். (ம-ச)


45ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 09.05.2005

மலர்வு 28.12.2007

உதிர்வு 30.12.2021



எட்மன் ஜேவதாஸ் உஷாறா
எட்மன் ஜேவதாஸ் மிதுர்ஷா

எமது அன்புச் செல்வங்களே!
இத்தரணியில் பல ஆண்டுகள் எம்முடன்
வாழ்ந்து எம்மை மகிழ்விப்பீர்கள் என்று
நினைத்தோமே ..........
ஆனால், எம் இதயங்களை ஒரு நொடியில் உடைத்தது ஏனம்மா?????

எமது பிள்ளைகளின் 45 ஆம் நாள் நினைவாக நாளை மறுதினம் (12.02.2022) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு யா/ அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(அன்பு உள்ளங்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொண்டு வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்)

இல, 432/8, மடம்வீதி,
யாழ்ப்பாணம்.

இவர்களின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்


# பெண்களை ஓரங்கட்டுவதை இந்தியா நிறுத்த வேண்டும்

## மலாலா தெரிவிப்பு

புதுடில்லி, பெப்.10

இந்தியத் தலைவர்கள் முஸ்லிம் பெண்களை ஓரங்கட்டுவதை நிறுத்த வேண்டும் என பெண் கல்விச் செயற்பாட்டாளரான மலாலா யூசுப்சாயி தெரிவித்துள்ளார்.

கர்நாடகத்தில் கடந்த ஒரு மாதமாக ஹிஜாப் தொடர்பான சர்ச்சை கல்லூரி மாணவர்களிடையே ஏற்பட்டு அங்கு பதற்ற நிலை உருவாகியுள்ளது. கல்லூரிகள், படிப்பு அல்லது ஹிஜாப் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்யும்படி கட்டாயப்படுதுகின்றன. ஹிஜாப் அணிந்து மாணவிகள் பள்ளிக்கு வரக்கூடாது எனக் கூறுவது கொடுமையானது. குறைவான ஆடை, முழுமையான ஆடை என ஆடையின் அடிப்படையில் பெண்களை ஏதேனும் வரம்புக்குள் அடையாளப்படுத்தி பெண்களை ஓரங்கட்டும் வாறாக ஓரங்கட்டும் செயல்களை இந்தியத் தலைவர்கள் தடுத்து நிறுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** குமற்றவர்கள் பாராட்டும்படியான செயல்களை செய்வீர்கள். நீங்கள் நெகிழ்ச்சி அடையும்படியான நிகழ்ச்சி ஒன்று நடைபெறும். சுப நிகழ்ச்சிகளில் சந்தோஷமாக கலந்து கொள்வீர்கள்.

**இடபம்:** குறிக்கோள் ஒன்றை தீர்மானித்து அதை நோக்கி முன்னேறுவீர்கள். உங்களை ஆதரிக்க மாட்டார் என்று நினைத்தவரின் அன்பு கிடைக்கும். வெற்றி பெறும் நாள்.

**மிதுனம்:** சொந்த பந்தங்களிடம் இருந்து அன்பளிப்பு கிடைக்கும். புதிய மின்னணு சாதனங்களை வாங்கி மகிழ்வீர்கள். உங்கள் மீது பிறர் கொள்ளும் பொறாமை சங்கடம் தரும்.

**கடகம்:** புதிய விஷயங்களைக் கற்பதில் ஆர்வம் பிறக்கும். உங்கள் பிரியத்துக்குரியவர் முன்னேற்றமான சூழ்நிலையை அடைவார். திட்டமிட்டு செய்த யுக்திகளால் எதிர்பார்த்த பலன் கிடைக்கும்.

**சிம்மம்:** தடைப்பட்ட பணி இன்று தொடரும். வருமானம் வரும். பணியாளர்களுக்கு தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். அடிப்படை வசதிகளை பெருக்கிக் கொள்வீர்கள். பயம் தீரும்.

**கன்னி:** பழைய வாகனத்தை மாற்றி புதிய வாகனம் வாங்குவீர்கள். அதிகாரப் பதவியில் உள்ளோரிடம் இருந்து நல்ல செய்தி வரும். தேவையின்றி கடன் வாங்குவதைத் தவிர்க்கப் பாருங்கள்.

**துலாம்:** பிறரிடம் அளவாகப் பழகுங்கள். எதிர்பாராத நன்மை ஒன்று வரும். பணியிடத்தில் விட்டுக் கொடுத்து செல்ல வேண்டி வரும். நிதிநிலை சிறக்கும். செலவுக்கேற்ப வரவு வரும். பழைய நட்பால் நன்மை ஏற்படும்.

**விருச்சிகம்:** நண்பர்களுக்கு அதிக இடம் கொடுக்க வேண்டாம். உங்களுக்குப் புரியாதிருந்த நுணுக்கங்கள் இன்று தெரிய வரும். உங்களின் உழைப்புக்கு அதிகப் பலன் கிடைத்து வியப்பீர்கள்.

**தனுசு:** சமீபத்தில் நட்பான நபர்களிடம் அதிக நெருக்கம் வேண்டாம். பொறாமைக்காரர்களால் ஏற்பட்ட தொல்லை தீரும். லாபம் நிதானப்போக்கில் வரும். பேச்சில் கவனம் தேவை. நட்பு வட்டம் விரியும்.

**மகரம்:** ஒப்பந்தம் ஒன்றின் மூலம் நன்மை அடைவீர்கள். பொருளாதார சிக்கலில் இருந்து விடுபட நடவடிக்கை எடுப்பீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு.

**கும்பம்:** பணியாளர்கள் கூடுதலாக உழைத்து நன்மை காண்பார்கள். சட்டதிட்டத்தை மீற வேண்டாம். குடும்பத்தினருடன் புரிதல் ஏற்படும். குழந்தைகளின் நடவடிக்கை பெருமிதம் அளிக்கும்.

**மீனம்:** இன்று பணியிடத்தில் கவனமாக செயற்படுவீர்கள். உடல் நலத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். நிம்மதி வரும். ரேவதி: அலுவலக பணிகளை விரைந்து முடித்து பாராட்டு பெறுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் கிரவல் அகழ்வு: அரச அதிகாரிகள் துணை

## சமூக ஆர்வலர்கள் குற்றச்சாட்டு

**முல்லைத்தீவு,பெப்.10**

**முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் கூழாமுறிப்புப் பிரதேசத்தில், தனியார் காணி யொன்றில், அனைத்து திணைக்களங்களாலும் வழங்கப்பட்டஅனு மதிப்பத்திரத்தைப் பயன்படுத்தி, முறைகேடாக அதிகளவில் கிரவல் அகழப் படுகின்றது.**

குறித்த பகுதியில் கிரவல் அகழப்படும் காணி தனியார் ஒருவருக்குச் சொந்தமானது. காணியின் ஆவணங்கள் போர்க்காலத்தில் தொலைந்த நிலையில், அந்தக்காணி கிரவல் அகழ்வுக்காக வழங்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலர், காணிப் பகுதி உத்தியோகத்தர், முன்னாள் பிரதேச செயலர் ஆகியோர் இணைந்து தனியாருக்கு காணியை வழங்காது, கிரவல் அகழ்வுக்கு வழங்கியமை சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

தனியார் காணிகளில் கிரவல் அகழ்வுக்கு அனுமதி வழங்கவேண்டாம் என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலரால், அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டு தெளிவுபடுத்தப்பட்ட நிலையில், குறித்த காணியை அரச காணி எனத் தெரிவித்து திணைக்களங்கள்அனைத்தினதும் அனுமதியுடன், வெளிமாவட்டத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கிரவல் அகழ்வுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இருந்த போதும் அனுமதிப் பத்திரத்தில் வழங்கப்பட்ட நிபந்தனைகளை மீறி, வகைதொகையின்றி அதிகளவான கிரவல் அகழப்பட்டு, குறித்த இடம் பெரும் குளம் போன்று மாறி வருகின்றது. இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த நிலையில் ஊடகவியலாளர் ஒருவரால் வழங்கப்பட்ட தகவலை அடுத்து, ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலைய அதிகாரிகள், குறித்த இடத்தில் கிரவல் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பைக்கோ இயந்திரத்துடன், அதன் சாரதியைக் கைது செய்தனர்.

எனவே தனியார் காணியை முறைகேடாக கிரவல் அகழ்வுக்கு வழங்கிய அதிகாரிகள்மீது, மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4-19)



# சத்தியக்காடு மீன் சந்தைக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.10

சத்தியக்காடு மீன் சந்தைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல்லை வலி.மேற்குப் பிரதேசசபையின் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன் நட்டு வைத்தார்.

நிகழ்வில் வலி. மேற்குப் பிரதேச சபையின் உறுப்பினர்கள், பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள், பிரதேசசபையின் ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-27)

# போட்டி முடிவுகள்

கிளிநொச்சி, பெப். 10

2022 ஆம் ஆண்டு தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சுவரொட்டிப் போட்டியின் கோட்ட மட்ட முடிவுகள் வெளியாகியுள்ளன.

**கரைச்சிக் கோட்டம்**

முதலாம் இடம் - அருளானந்தம் சுதர்சன் சிவபாத கலையகம் அ.த.க.பாடசாலை, இரண்டாம் இடம் - பாரிஸ் பாத்திமா பஸீஹா கிளிநொச்சி மகா வித்தியாலயம், மூன்றாம் இடம் - ரவிச்சந்திரன் ஜெனப்பிரியன் சிவபாத கலையகம் அ.த.க. பாடசாலை.

**பூநகரிக் கோட்டம்**

முதலாம் இடம் - கனகலிங்கம் பாவழகன் பூநகரி மத்திய கல்லூரி , இரண்டாம் இடம் - அருள்நேசன் விதுர்ஷன் பூநகரி மத்திய கல்லூரி, மூன்றாம் இடம் - இளங்கோவன் ஜெராட் எபநேசன் பூநகரி மத்திய கல்லூரி

**பளைக் கோட்டம்**

முதலாம் இடம் - மகாறஞ்சிதன் சிந்துஜன் பளை மத்திய கல்லூரி, இரண்டாம் இடம் - ஈஸ்வரநாதன் லக்சன் பளை மத்திய கல்லூரி, மூன்றாம் இடம் - வேல்முருகையா கோபிசாந் பளை றோ.க.த.க. பாடசாலை.

**கண்டாவளைக் கோட்டம்**

முதலாம் இடம் - ரத்தினம் சுஜீபா முருகானந்தாக் கல்லூரி, இரண்டாம் இடம் - சிவகுமார் யதுர்சன் முருகானந்தா கல்லூரி, மூன்றாம் இடம் - சிவகுமார் டிலக்சன் முருகானந்தாக் கல்லூரி. (ஒ-ரி1)



# மீண்டும் சேதமடையும் வீதிகள் சங்கானைவாசிகள் விசனம்

யாழ்ப்பாணம், பெப்.10

வீதி அபிவிருத்திக்குப் பயன்படும் கனரக வாகனங்கள் மற்றும் கட்டுமானப் பொருள்களை சங்கானை செங்கற்படை பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் களஞ்சியப்படுத்துவதால் வீதிகள் மீண்டும் மோசமான நிலைக்குச் செல்கின்றன எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சங்கானை மருத்துவமனை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளிலுள்ள வீதிகளின் அபிவிருத்தி வேலைகள் 'ஐ' றோட் திட்டம் மூலம் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. தற்போது அங்கிருந்து பல கிலோமீற்றர் தூரத்திலுள்ள வீதிகளின் சீரமைப்புக்காக பொருள்களும் கனரக வாகனங்களும் எடுத்துச் செல்லப்படுவதால் குறித்த வீதிகள் மீண்டும் சேதமடைய ஆரம்பித்துள்ளன. மேலும் பண்டத்தரிப்பு - வடலியடைப்பிலிருந்து சங்கானை மருத்துவமனை செல்லும் வீதியும் முற்றாக சேதமடைந்துள்ளது. ஒடுங்கிய வீதிகளைக் கொண்ட கிராமப்புறங்களின் மையப்பகுதிகளில் இவ்வாறான களஞ்சியங்களை அமைத்து இலாபம் தேட சிலர் முனைகின்றமை பொருத்தமற்ற செயல் என பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (வ-125)

# 'என் சுவாசமே' நூல் வெளியீடு

பருத்தித்துறை, பெப்.10

பொதுச் சுகாதாரப்பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் எழுதிய 'என் சுவாசமே' சுகாதார மேம்பாட்டு நூல் வெளியீடு 6ஆம் திகதி பருத்தித்துறை எஸ்.எஸ்.கொம்பிளெஸ் மண்டபத்தில் இடம்பெற்றது.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் திருமதி பிருந்திகா செந்தூரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் க.செந்தூரன், கௌரவ விருந்தினராக பருத்தித்துறை ஆதார மருத்துவமனைபதில் மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் வி.கமலநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-9)




# படையினரால் பூஸ்டர் ஏற்றல்

சாவகச்சேரி, பெப். 10

சுகாதாரத் திணைக்கள துணை மருத்துவ அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் சுகவீன விடுமுறை போராட்டத்தையடுத்து, சாவகச்சேரி பொதுச்சந்தையில் படையினரால் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

இதன்போது பெருமளவு பொதுமக்களும், வர்த்தகர்களும் தடுப்பூசியை ஏற்றிக்கொண்டனர். துணை மருத்துவ சேவையைச் சேர்ந்த அலுவலர்கள் விடுமுறையில் நிற்பதால, மக்களின் நலன்கருதி படையினர் தடுப்பூசியை ஏற்றி வருகின்றனர். (ம-4-9)

# கசிப்பு விற்பனையில் ஈடுபட்டோருக்கு தண்டம்

சாவகச்சேரி, பெப்.10

இலங்கையின் சுதந்திரதினத்தன்று கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நால்வருக்கு நீதிமன்றில் நேற்றுமுன்தினம் 10 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது. தண்டப்பணம் செலுத்தத் தவறின் 3 மாதங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

சாவகச்சேரி கல்வயல் மற்றும் மந்துவில் ஆகிய பகுதிகளில் கசிப்பு விற்பனை இடம்பெறுகிறது என சாவகச்சேரி மதுவரி நிலையத்தினருக்குக் கிடைத்த தகவலையடுத்து நடத்திய திடீர் சோதனையிலேயே குறித்த நால்வரும் கைது செய்யப்பட்டிருந்தனர். (ச-9)

# வாழ்வாதார உதவி

சாவகச்சேரி, பெப்.10

மனித உரிமைகளுக்கான கிராமம் அமைப்பால் சாவகச்சேரி நுணாவில் மேற்கு ஜே/308 கிராம அலுவலர் பிரிவிலுள்ள பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் இரண்டுக்கு வாழ்வாதார உதவியாக 15 கோழிகள் வழங்கப்பட்டன. (வ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலகத் தமிழர் சதுரங்கப் பேரவை மற்றும் யாழ். மாவட்ட சதுரங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில், வேகச் சதுரங்கச் சுற்றுப் போட்டி யாழ். இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. (ரி1-125)





சமூக வலைத்தளங்களில் வெறுப்புப் பேச்சுக்களை கையாளுதல் மற்றும் சமூகவலைத்தள பாவனை தொடர்பிலான பயிலரங்கு, சிறகுகள் அமையத்தின் ஏற்பாட்டில் யாழ்.பொது நூலக குவிமாடத்தில் அண்மையில் இடம் பெற்றது. (ம)






இராஜேஸ்வரி அறக்கட்டளை நிதியத்தால் பொருளாதாரம் நலிவடைந்த இரு குடும்பங்களுக்கு காங்கேசன்துறை கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழகம் மற்றும் இருபாலை கோல்டன் ஸ்டார் லயன்ஸ் கழகம் ஆகியவை இணைந்து அண்மையில் பசு மாடுகளை வழங்கி வைத்தன. (ச-9)





உடுப்பிட்டியிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஒரு தொகுதி மாணவர்களுக்கு சாதாரண தர மற்றும் உயர் தர கற்றலைப் பூர்த்தி செய்யவும் மருத்துவ மற்றும் பொறியியல் பீடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தமது கற்கைநெறியை பூர்த்தி செய்யவும் புலமைப் பரிசில் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. புலம்பெயர் உடுப்பிட்டி வாழ் மக்களது பங்களிப்புடன் உடுப்பிட்டி நலன்புரி சங்கம் மாதிரிச் செயற்றிட்டமாக இதை முன்னெடுத்துள்ளது. இதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு உடுப்பிட்டி கலாசார மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. கரவெட்டி பிரதேச செயலர் ஈ.தயாரூபன் புலமைப்பரிசில் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். (வ-20)





வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட ஸ்ரீ கணேஸ்வரா மகா வித்தியாலயத்தில் கணினி ஆய்வுகூடம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. இதற்கான நிதியுதவியை வன்னி ஹோப் மற்றும் ரட்ணம் பவுண்டேசன் வழங்கியதோடு பிறைட் சமூக அபிவிருத்தி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் கணினிகளும் வழங்கப்பட்டன. (ரி1-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 03 . 1950

மறைவு 09 . 02 . 2022

## செல்வி சிவபுண்ணியம் சந்திரவதனா

(ஓய்வு நிலை ஆசிரியர்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சிவபுண்ணியம் சந்திரவதனா நேற்று (09.02.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவபுண்ணியம் - பாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், மன்மதராசா, மோகனா மற்றும் நாகதேவி (கனடா) ஆகியோரின் சகோதரியும், அருள்திரேஸ், யோகலிங்கம், சபேசன் (கனடா) ஆகியோரின் மைத்துனியும், பேடினன் (பிரான்ஸ்), லெட்டினன் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்), ஜஸ்டினன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் மாமியும், சுஜீவன், ரஜீவன் (பிரான்ஸ்), கார்த்திகா, கோபிகா (பிரான்ஸ்), குபேரன் (கனடா), வியாசன் (கனடா) ஆகியோரின் பெரியதாயும், ராஜ்குமார், சஜிக்கா (உதவி முகாமையாளர் LIC), கஜேந்தினி ஆகியோரின் மாமியாரும், கிருஷ்வேணி, ரஜிபனா (கிராம அலுவலர்) ஆகியோரின் சித்தியும், தாட்ஷாயினி, அஸ்வின், அனேன், ரோனிஷா, ஹஸ்றீனா, ஜவ்றின், மஹேறாசதன், ஆருஷா, ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
லெட்டினன் - 077 502 2110
சுஜீவன் - 077 763 1482

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(cs 42839) (2.6)

# மரண அறிவித்தல்



தோற்றம் 27 . 11 . 1932

மறைவு 09 . 02 . 2022

## துரைச்சாமி தங்கரத்தினம்

சங்குவேலி தம்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி தங்கரத்தினம் நேற்று (09.02.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமியின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சீனிவாசகம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நடேசு, சுப்பிரமணியம் மற்றும் நாகம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான பவானி, அரவிந்தன் மற்றும் ஜெயக்குமார் (பிரான்ஸ்), மணிமாறன் ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பராணி, தோத்திரவதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜெனித்தா, துஷாந்தன், பிரசன்னியா, ஜானுஜா, றம்சியா, அபிவர்ஷனா, விமல்ராஜ், றுக்ஷனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நிஷ்வந், ஷஸ்மிதா, அத்ரித் ஆயோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.02.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் சங்கம்புலவு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 464 6896

(cr 37537) (2.6)

# மரண அறிவித்தல்



தோற்றம் 16.01.1937

மறைவு 07.02.2022

## இராஜரட்ணம் கதிர்காமநாதர்

(ஓய்வுபெற்ற மாக்பெட் முகாமையாளர் யாழ்ப்பாணக் கிளை)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் கதிர்காமநாதர் கடந்த (07.02.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் வங்களா ஒழுங்கை மல்லாகத்தை சேர்ந்த காலஞ்சென்றவர்களான வைத்தியகலாநிதி இராஜரட்ணம் - செல்லம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான கமலா, லீலா ஆகியோரின் பாசமிகு கணவரும் சிதம்பரநாதன், அபிராமி, முருகதாசன், நமசிவாயம், காலஞ்சென்ற திலகவதி மற்றும் Dr. செல்வலக்சுமி (ITI கொழும்பு), ஜெயக்குமார் (Lake House, யாழ்ப்பாணப் பிராந்தியக்கிளை முகாமையாளர்), துஷ்யந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயந்தி, நடேஸ்வரன், ஜெகந்தினி, மாலினி, செல்வேந்திரன், (கதிரியக்க தொழில்நுட்பவியலாளர் - மகரகம புற்றுநோய் வைத்தியசாலை,), உதயரஞ்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வனவள பாதுகாப்புத் திணைக்களம்), றமணா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் வைத்தியநாதரின் பாசமிகு சகோதரனும், சாந்தாவின் அன்பு மைத்துனரும் கௌசல்யா, மயூரன், துவாரகா, துசிபா, துளசி, விஷ்வகரன், நரேஷ், றாகுல், வருணா, கேசுபவன், கிஷோன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வங்களா ஒழுங்கை,
மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 42843 (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணின் கைச்சங்கிலி பட்டப் பகலில் அறுப்பு

யாழ்ப்பாணம், பெப்.10

வீதியில் பயணித்த பெண் ஒருவரின் கைச்சங்கிலி, மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று கோண்டாவில் பகுதியில் பட்டப் பகலில் நடந்துள்ளது.

கோண்டாவில் குளக்கரை வீதியில் நேற்று மதியம் 12 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. கொக்குவில் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரின் கைச்சங்கிலியே அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-125)

## எரிவாயு அடுப்பு வெடிப்பு



யாழ்ப்பாணம், பெப்.10

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாத கல் நுணசை பகுதியில் நேற்று மதியம் எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

மதிய உணவுத் தயாரிப்பின்போது எரிவாயு அடுப்பு வெடித்தது என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் இளவாலைப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து, பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர். (எ-125)


## பெயர் மாற்றம்

வைரமுத்து செல்வவதி செந்தாமரை ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை வைரமுத்து செல்வவதி என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் செல்வவதி என்றே கையொப்பம் இட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

(CR 7251 B)1-6 செல்வவதி

## பெயர் மாற்றம்

சந்தை வீதி அனிஞ்சியன்குளம் யோகபுரத்தில் வசிக்கும் **நவரத்தினசிங்கம் அரிகரன்** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **நவரத்தினசிங்கம் ஹரிஹரன்** என மாற்றம் செய்வதோடு இனி வரும் சகல ஆவணங்களிலும் **ந. ஹரிஹரன்** என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக உறுதிபடுத்திக்கின்றேன்

(CR 7251 A)1-6 ந. ஹரிஹரன்

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி - 50 ரூபாய்

077 334 1281

## வேலையாட்கள் தேவை

கொழும்பில் இயங்கும் தனியார் பொதிகள் சேவை நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

உணவு, தங்குமிட வசதி இலவசம். ஆர்வம் உள்ளோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 077 386 6250

## பெயர்மாற்றம்

நாவற்குழி 300 வீட்டுத்திட்டத்தில் வசிக்கும். **வேலாயுதம் பிரகா** ஆகிய நான் எனது பெயரை **வேலாயுதம் தீபிகா** என மாற்றம் செய்வததோடு, இனி வரும் சகல ஆவணங்களிலும் வேலாயுதம் தீபிகா என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிசக் குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

(Cs 42841) (3/6) **வேலாயுதம் தீபிகா**

## வேலை வாய்ப்புக்கள் ஹோட்டல் ஓவியா

HOTEL OVIYA

**01. சமையலாளர் (Cook)**
இந்தியா, இலங்கை மற்றும் சைனீஸ் உணவுவகைகள் சமைப்பதில் குறைந்தது 5 வருட அனுபவமுள்ளவர்கள் தேவை.

**02. சமையல் உதவியாளர் (Cook Assistant)**
சமையல் உதவியாளராக குறைந்தது 2 வருட அனுபவம் உள்ளவர்கள் தேவை.

**03. உணவகப் பணியாளர் (Restaurant Steward)**
Restaurant Waiter வேலையில் குறைந்தது 1 வருட அனுபவம் உள்ளவர்கள் தேவை.

**04. Room Boy**
Room Boy வேலையில் குறைந்தது 1 வருட அனுபவம் உள்ளவர்கள் தேவை.

**தொடர்புகளுக்கு: முகாமையாளர் (Manager) - 077 366 0828**
**Address: 47, Mill Road, Vavuniya,**
**Email.hoteloviya@gmail.com**

(CS 00964 (3/6)

## வட இலங்கைச் சங்கீத சபை பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோருதல் - 2022

வட இலங்கைச் சங்கீத சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான தரம் 1, 2, 3, 4, ஆகிய தரங்களுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி மேலும் இரண்டு வாரங்கள் நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப்படிவம், அறிவுறுத்தல்களை வட இலங்கைச் சங்கீத சபையின் www.ncomsjaffna.com எனும் இணையத் தளத்தில் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்க முடியும்.

**விண்ணப்பிப்பதற்கான முடிவுத் திகதி : 20.02.2022**

**மு.இராதாகிருஷ்ணன்,**
**தலைவர்,**
**வட இலங்கைச் சங்கீத சபை,**
**மருதனார்மடம் சுன்னாகம்**

(CR 37536) (3/6)



# யாழ்ப்பாணம் ஆவரங்கால் நெல்லியோடை அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலய புனராவர்த்தன பஞ்சகுண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 11.02.2022

**பிலவ வருடம் தை மாதம் 22 ஆம் நாள் (04.02.2022) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பமாகியது**

**இன்று (10.02.2022) வியாழக்கிழமை காலை 8.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை "எண்ணெய்க்காப்பு" நடைபெறும்.**

**நாளை (11.02.2022) வெள்ளிக்கிழமை மிருக சீரிஷ நட்சத்திரமும் மகர லக்கினமும் சித்த யோகமும் கூடிய காலை 6.00 மணிமுதல் 8.00 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் தூபிகள் கும்பாபிஷேகம் நடைபெற்று, கும்பங்கள் வீதிப் பிரதட்சணத்தினைத் தொடர்ந்து மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்**

"அம்பிகையைச் சரண் அடைந்தால் அதிக வரம் பெறலாம்"

(cs:42818) (2.6)

**முத்துமாரியம்மன் தேவஸ்தானம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதையல் தோண்டியோர் மன்னாரில் நேற்றுக் கைது

மன்னார், பெப்.10

மன்னார், வங்காலை பஸ்திபுரி பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் 6 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வங்காலைப் பொலிஸார் தெரிவித்தனர். புதையல் தோண்டப் பயன்படுத்தப்பட்ட ஒருதொகுதி உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

நானாட்டான் பிரதான வீதியில், பஸ்திபுரி பகுதியில் உள்ள வீடொன்றுக்குப் பின்புறம் புதையல் தோண்டுகின்றனர் என்று வங்காலைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களில் கண்டியைச் சேர்ந்த 50 வயதுடைய மந்திரவாதி ஒருவரும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரும் அடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். ஏனைய நால்வரும் வங்காலையைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்களின் ஒருவர் ஆசிரியர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் விசாரணையின் பின்னர் மன்னார் நீதிமன்றில் முற்படுத்தப் படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-56)



யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த சிவாச்சாரியார்கள் முன்னிலையில், தம்புள்ள கலேவல்ல முத்துமாரியம்மன் ஆலய கும்பாபிஷேக பெருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ம-4,20)


## பதினாறாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 . 04 . 1953 — உதிர்வு 10 . 02 . 2006



### அமரர் திரு. லோறன்ஸ் அலெக்ஸ்சாண்டர்

தந்தை என்ற சொல்லின் திரு உருவமே!
பிறர் கைநாடா பிறவிப் பெருங்கடலே!
தன்னம்பிக்கையை தனித்துவமாய் கொண்டாயே!
உம் மன உறுதியே என்றும் வெல்வது இறுதியே!
உறவுகளையே உம் சிந்தனையாய் கொண்டாயே!
உம் வாழ்வையே நமக்கு பரிசாக தந்தாயே...

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், சகோதரிகள், பேரப்பிள்ளைகள்.

(cs.18605) (2.6)



## மரண அறிவித்தல்

பிறப்பு 13 . 01 . 1939 — இறப்பு 09 . 02 . 2022



### திரு. மரியார்-நடேசு

இல.46, சாவற்கட்டு, ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மரியார் நடேசு நேற்று (09.02.2022) புதன்கிழமை இறையடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியார் சுந்தரத்தின் அன்பு மகனும், மயிலு சுந்தரத்தின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தவமணி, நாகரத்தினம், தங்கவேலு மற்றும் சீவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இலங்கேஸ்வரன் (முதலுதவி போதனாசிரியர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை), காலஞ்சென்ற நற்குணம் மற்றும் செல்வச்சந்திரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், சிறுவர் நன்நடத்தை திணைக்களம், வட மாகாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், செல்வமதி, குணமலர் (கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்-யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும், அபிராமி (திருகோணமலை கிண்ணியா அல்லிபான் மகாவித்தியாலயம்- ஆசிரியர்), இலக்ஸ்மன் (வவு/பழையவாடி அ.த.க. பாடசாலை-ஆசிரியர்), சித்திராங்கன், சௌமியா, இலக்கியா, சாகித்யா, தியானா, சங்கவன் சஞ்சிகா (வவுனியா புளியங்குளம் ஆரம்ப பாடசாலை-ஆசிரியர்), அசோக் (மென்பொறியியலாளர்- கொழும்பு), சரணிதரன் ஆகியோரின் பேரனாரும், மிருணிகா, விஷ்மகி ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2022) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் மின் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாவற்கட்டு,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.
தொடர்புக்கு:0777 115 453



## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 04 . 1955 — மறைவு 09 . 02 . 2022



### சந்திரசேகரம் பாலகிருஷ்ணன்

இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும் மஞ்சத்தடி இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் பாலகிருஷ்ணன் நேற்று (09.02.2022) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரம் சிவபாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற இரத்தினம் - மகேஸ்வரியின் அன்பு மருமகனும், சந்திரவதனியின் அன்புக் கணவரும், சேகரன், வைஷ்ணவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சோபிகாவின் பாசமிகு மாமனாரும், சந்திரகௌரி, சந்திரமோகன், சந்திரகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஸ்ரீதரன் (ஜேர்மனி), சிவகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், பைரவி, அருண், மாறன், சிவசேகரன், குணசேகரன் ஆகியோரின் பெரிய தந்தையும், கௌரீசன், ஆர்த்திகா (ஜேர்மனி), தர்சன் (கனடா), கஜன் (கனடா) ஆகியோரின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.02.2022) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் காரைக்கால் இந்து மயானத்தில் நடைபெற்று முடிந்தது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்...

பட்டுள்ளது.

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் சுகாதாரத் தொழிற்சங்கங்களின் போராட்டம் காரணமாகவே பி.சி.ஆர். பரிசோதனைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைப் பணிப்பாளர் மருத்துவர் நந்தகுமார் தெரிவித்தார். (எ-இ)

## அன்டிஜென்...

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 800 அன்டிஜென் பரிசோதனைத் தொகுதிகளே உள்ளன. இவை ஒரு சில நாள்களுக்கு மட்டுமே போதுமானவை. அதனால் பரிசோதனை எண்ணிக்கையை மட்டுப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

கைவசமுள்ள அன்டிஜென் பரிசோதனைத் தொகுதிகள் முடிந்த பின்னர், கொழும்பில் இருந்து பரிசோதனைத் தொகுதிகள் வந்த பின்னரே பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகளவான கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-எ-214)

## அரசின்...

பெரமுன கட்சியின் அரசியல் பரப்புரைக் கூட்டம் நேற்று அநுராதபுரத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உரம் இருந்தாலும்சரி, இல்லாவிட்டாலும்சரி விவசாயிகளின் வருமானத்தை நூறு சதவீதம் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதிமொழியை இந்தச் சந்தர்ப்பத்தில் வழங்குகின்றேன்.

விவசாயிகளுக்கு இலவசமாக உரம் வழங்கப்பட்டது. நெல்லுக்கு சிறந்த விலை வழங்கப்பட்டது. விவசாயிகளிடமிருந்து கையகப்படுத்தப்பட்ட காணி விடுவிக்கப்படும் எனக் கூறினேன். அந்த உறுதிமொழியும் நிறைவேற்றப்பட்டுள்ளது. விவசாயிகளுக்காக அர்ப்பணிப்புடன் எதனையும் செய்வதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன்.

நாட்டை ஐந்து வருடங்கள் ஆட்சி செய்தவர்கள், விவசாயத்துக்காக எதுவுமே செய்யாதவர்கள், எதிர்கால ஜனாதிபதிக் கனவில், விவசாயிகளை ஏமாற்றி, இந்த நாட்டை பாதாளத்துக்கு கொண்டு செல்ல முயற்சிக்கின்றனர்.

மஹிந்த ராஜபக்ச, தீவிரவாதிகளிடமிருந்து நாட்டை மீட்டெடுத்து அபிவிருத்தியை நோக்கி அழைத்துச்செல்கையில், போலிப் பரப்புரைகளை முன்னெடுத்து 2015 இல் ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. அதன்பின்னர் 5 ஆண்டுகளில் என்ன நடந்தது? அன்று நாம் உறுதிப்படுத்திய பாதுகாப்பு சீர்குலைக்கப்பட்டது. இறுதியில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் வந்துதான் அது நின்றது. புலனாய்வுப் பிரிவையும் சீரழித்தனர். படையினர் காட்டிக்கொடுக்கப்பட்டனர். சர்வதேசத்துக்குச் சென்று இந்தநாட்டின் சுயாதீனத்தன்மை காட்டிக்கொடுக்கப்பட்டது. எமது கலாசார மரபுரிமைகள் இல்லாது செய்யப்பட்டன.

இந்த நிலைமையை கடந்த இரண்டு ஆண்டுகளில் நாம் இல்லாது செய்துள்ளோம். தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எமது மதம், கலாசாரம் மற்றும் மரபுரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. போலிப்பரப்புரைகளுக்கு ஏமாந்து, நாட்டை மீண்டும் காட்டிக் கொடுக்க வேண்டாம்.

இந்த அரசை வீழ்த்துவதற்கும், அரசின் பயணத்தை குழப்புவதற்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சக்திகள் முற்படுகின்றன. அன்று நாம் ஆட்சியை பொறுப்பேற்றபோது திட்டமிடல் இருந்தது. எதிர்பாராத விதத்தில் கொரோனா நெருக்கடி வந்தது. அந்தச் சவால்களுக்கு முகங்கொடுத்தோம். தடுப்பூசி கொண்டுவந்தோம். அனைவரும் மூன்றாவது தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுங்கள். நாட்டை மீண்டும் முடக்குவதற்கு இடமளிக்க வேண்டாம் - என்றார். (எ-44)

## பயங்கரவாத...

ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான 24ஆவது கூட்டு ஆணைக்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் பிரசல்ஸில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலேயே ஐரோப்பிய ஒன்றியம் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளது.

இந்தக் கூட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகிய சுயாதீன நிறுவனங்களின் முன்னேற்றம் தொடர்பாக இலங்கை குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம், சுயாதீன நிறுவனங்கள் சுதந்திரமாகவும், செயற்றிறனுடனும் இயங்க வேண்டியதன் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் ஐரோப்பிய ஒன்றியம் கோடிட்டுக் காட்டியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் திருத்தங்களை ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்றுள்ளபோதும், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திருத்தச் சட்டத்தில் முக்கியமான அம்சங்கள் உள்ளடக்கப்படவில்லை என்று ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

சர்வதேச விதிகளுக்கு அமைவாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் திருத்தங்களை மேற்கொள்ள இலங்கை மேலதிக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும் என்றும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களுக்கு எந்தவிதக் குற்றச்சாட்டும் இன்றிப் பிணை வழங்குவதற்கான நடைமுறைக்கேற்ற மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையிடம் வலியுறுத்தியுள்ளது. (அ-எ-இ)

## இந்த...

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய எதிரணி பிரதம கொறடாவான அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல இவ்வாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அமெரிக்கா, இந்தியா, இங்கிலாந்து போன்ற நாடுகளை எடுத்துக்கொண்டால் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை ஏதாவது ஒரு தேர்தல் நடத்தப்படும். எனவே, எமது நாட்டிலும் இந்த வருடத்தில் மாகாண சபை அல்லது உள்ளூராட்சிமன்றத் தேர்தல் கட்டாயம் நடத்தப்பட வேண்டும். நாட்டு மக்களின் நிலைப்பாட்டை அறிய இதுவே சிறந்த வழி.

தேர்தலைச் சந்திக்கத் தயார் என பஸில் ராஜபக்ச அறிவிப்பு விடுக்கின்றார். ஆனால், திருட்டுத்தனமாக தேர்தலை ஒத்திவைக்கின்றனர். தேர்தலொன்று நடத்தப்படுமானால் இந்த அரசு மண்கவ்வும். இந்த ஆண்டில் கட்டாயம் தேர்தலொன்று நடத்தப்பட வேண்டும் - என்றார். (எ-44)

## பாரவூர்தியுடன்...

சைக்கிளில் பயணித்த முதியவர் பாரவூர்தியுடன்மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார். விபத்துக்குள்ளான முதியவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும், சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-23)

## ஈ.பி.எவ்,...

தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் உள்ள நிதியானது முதலீடு மூலம் பெறப்படும் வருமானம் எனக் கருதப்படுவதால் அதற்கு வரி விதிக்க வேண்டும் என இறைவரி ஆணையாளர் இதற்கு முன்னர் கோரியிருந்தார். அது தவறான நிலைப்பாடாகும் எனக் கூறி, அந்த யோசனை நிராகரிக்கப்பட்டது.

இந்த வரி அறவிடப்படும் செயற்பாட்டுக்கு எனது அமைச்சும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது - என்றார். (அ-எ-இ)

## எறிகணை...

வளலாயில் உள்ள காணி ஒன்றில் சந்தேகத்துக்கு இடமான பொருள் ஒன்று இருக்கின்றது என்று இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் எறிகணை மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து, அச்சுவேலிப் பொலிஸார் நீதிமன்ற அனுமதியைப் பெற்று, எறிகணையை செயலிழக்கச் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ-எ-125)

## தமிழ்த்...

மன்றத்தில் காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்தக் கருத்தரங்கில், 'ஈழத்தமிழர் தீர்வில் நாடாளுமன்றத்தின் வகிபாகம்' என்ற தலைப்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரனும், 'சமஷ்டித்தீர்வு: செல்வா முதல் இன்று வரை முயற்சிகளும் முட்டுக்கட்டைகளும்' என்னும் தலைப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராசாவும், 'ஈழத்தமிழர் தீர்வு நோக்கிய செயற்பாடுகளும் உறுதியான ஐக்கியத்தின் முக்கியத்துவமும்' என்னும் தலைப்பில் ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும், 'நல்லாட்சி அரசின் தீர்வு நோக்கிய செயற்பாடுகளும் சமகாலத்தில் வடக்கு - கிழக்கில் அரசின் முரண்பாடான செயற்றிட்டங்களும்' என்னும் தலைப்பில் புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தனும், '13 க்கு அப்பாலான பேச்சுக்கள்: பிரேமதாஸ தொடக்கம் மஹிந்த வரை ஒரு பகுப்பாய்வு' என்னும் தலைப்பில் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறிகாந்தாவும், 'ஈழத்தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வும் இலங்கையில் இந்தியப் பாதுகாப்பு நலன்களும் ஓர் அரசியல் பொருளாதார பார்வை' என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரச அறிவியல்துறை மூத்த விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கமும், 'சர்வதேச அழுத்தங்களும் சமஷ்டித் தீர்வை அடைவதில் முன்னால் இருக்கும் வழிமுறைகளும் சந்தர்ப்பங்களும் சவால்களும்' என்னும் தலைப்பில் அரசியல் ஆய்வாளர் ஏ.யதீந்திராவும், 'ஈழத்தமிழர் அரசியல் தீர்வில் இந்தியாவின் பிராந்திய சர்வதேச முக்கியத்துவம்' என்ற தலைப்பில் அரசியல் ஆய்வாளர் நிலாந்தனும் இதன்போது கருத்துரை வழங்கவுள்ளனர். (அ-ஒ.5)

## கஞ்சா...

என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்றும், சந்தேகநபரிடம் இருந்து 135 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

52 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அவரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-125)





யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத் தளபதியின் எண்ணக் கருவுக்கு அமைய யாழ்ப்பாணத்திலுள்ள 50 பாடசாலை மாணவர்கள் மற்றும் ஐம்பது கர்ப்பிணிப் பெண்கள் ஆகியோருக்கு உதவிப் பொருள்களும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ச-23)



கிளிநொச்சி, திருவையாறில் அமைந்துள்ள சிறப்புத் தேவைக்குட்பட்ட சிறுவர்களின் தனியார் நிறுவனமொன்றுக்கு, முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் முயற்சியால் ஒருதொகுதி தொற்றுநீக்கி மருந்துப் பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சியிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது வெலிகந்தைப் பிரதேசத்தில் வைத்து 2005ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி இலங்கை இராணுவத்துடன் சேர்ந்து இயங்கிய ஆயுதக் குழுவொன்றால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேருவின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் மட்டக்களப்பில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (ம)

## மீண்டும் தங்கம் விற்றது இலங்கை மத்திய வங்கி

கொழும்பு, பெப்.10

இலங்கை மத்திய வங்கியின் வசம் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இருப்பாகக் காணப்பட்ட 175.4 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான தங்கம், இந்த வருடம் ஜனவரி மாதத்தில் 92 மில்லியன் அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த ஒருமாத காலத்தில் 83.4 மில்லியன் டொலர் பெறுமதியான தங்கம் மத்திய வங்கியால் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட தரவுகளின்படி நவம்பர் மாதம் (2021) 382.2 மில்லியன் டொலராக் காணப்பட்ட தங்கத்தின் இருப்பு, டிசெம்பரில் 206.8 மில்லியன் டொலராக வீழ்ச்சியடைந்து 175.4 மில்லியன் டொலராகப் பதிவாகியிருந்தது.

இந்தப் பின்னணியிலேயே கடந்த ஜனவரி மாதத்தில் மாத்திரம் மத்திய வங்கியின் வசமிருந்த 83.4 மில்லியன் டொலர் பெறுமதியான தங்கம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

நாடு பெரும் நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கின்றது. இந்த நெருக்கடியைக் கையாள்வதற்கான மத்திய வங்கி அதன்வசமுள்ள தங்கத்தை விற்பனை செய்கின்றது என்றும், இது நெருக்கடிகளை மேலும் தீவிரப்படுத்தும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பொருளாதார நிபுணருமான கலாநிதி ஹர்ஷ டி சில்வா ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தார். (எ-இ)

## தேர்தலை இலக்குவைத்து பணியாற்றுவோர் நாமல்ல!

*மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு*

கொழும்பு, பெப்.10

எதிர்காலத்தில் இடம்பெறும் தேர்தலை கருத்தில் கொண்டு மக்களுக்கு பணியாற்றுபவர்கள் அல்லர் நாம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் இடம்பெறும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பரப்புரைக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; கடந்த காலங்களில் நாங்கள் மக்களின் நலன் கருதியே அனைத்து திட்டங்களையும் செயற்படுத்தினோம். தேர்தலை இலக்கு வைத்து எந்தவொரு பணிகளையும் முன்னெடுக்கவில்லை. நாட்டு மக்கள் தொடர்ந்து எம்முடன் இருக்கின்றனர். எதிர்க்கட்சிகளுக்கு முடியுமானால் கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசை வீழ்த்தி காட்டட்டும்- என்றார். (எ-இ)

# 8 இந்திய ட்ரோலர்கள் பூநகரியில் ஏலம்!



கிளிநொச்சி, பெப். 10

கிளிநொச்சி- பூநகரி கிராஞ்சி பகுதியில் எட்டு இந்திய ட்ரோலர்கள் 94 ஆயிரத்து 300 ரூபாவுக்கு ஏலத்தில் விற்கப்பட்டுள்ளன.

கிராஞ்சி கடற்படை முகாம் பகுதியில் வைத்து குறித்த ட்ரோலர் படகு கள் ஏலத்தில் விற்கப்பட்டன. பல ட்ரோலர் படகுகள் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-214)

பெப்ரவரி மாதத்தின்

## முதல் எட்டு நாள்களில் 80 பேருக்குத் தொற்று!

தென்மராட்சிப் பிரதேசத்தில் பெப்ரவரி மாதத்தின் முதல் எட்டு தினங்களில் மட்டும் எண்பது பேர் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர் என சுகாதார திணைக்கள புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் காய்ச்சல் காரணமாக சிகிச்சை பெற வந்தவர்களுக்கு முன்னெடுத்த பி.சி.ஆர். சோதனையிலேயே இவர்களில் அநேகமானவர்களுக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. (ம-9)

## தவறான முடிவெடுத்து தந்தையும் மகளும் சாவு!

மட்டக்களப்பு,பெப்.10

தந்தையும் மகளும் அடுத்தடுத்து தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளனர்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு ஏறாவூர் களுவங்கேணிப் பிரதேசத்தில் நடந்துள்ளது.

நேற்றுமுன்தினம் 17 வயதுச் சிறுமி ஒருவர் நஞ்சருந்தி உயிரை மாய்த்துள்ளார். இந்த நிலையில் நேற்று சிறுமியின் தந்தை வீட்டின் கூரையில் தூக்கிட்டு உயிரை மாய்த்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமி ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்துள்ளார். அவர் இளைஞர் ஒருவரைக் காதலித்துள்ளார் அதற்கு தந்தை எதிர்ப்பு தெரிவித்ததால், சிறுமி நஞ்சருந்தி உயிரை மாய்த்துள்ளார்.

இதனையடுத்து சிறுமியின் சாவுக்கு தந்தையே காரணம் என்று விசனம் தெரிவிக்கப்பட்டதால், சிறுமியின் தந்தை வீட்டின் கூரையில் தூக்கிட்டு உயிரை மாய்த்துள்ளார் என்று ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இருவரது சடலங்களும் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-4இ)


**அறிவித்தல்**

இல.153/12, கலீபா அப்துல்காதர் வீதி, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஆதனமானது காலஞ்சென்ற முகம்மது ராஜா மகள் கவ்லா என்பவருக்கு சொந்தமானதான ஆதனமாக இருந்து, நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றின் T/213ம் இலக்க தத்துவ வழக்கின் பிரகாரம் அவரது மூத்த சகோதரரான மொகமட் ராஜா மொகமட் அனஸ் என்பவரின் பொறுப்பிலேயே உள்ளது எனவும், குறித்த ஆதனத்தில் உரிமை இல்லாத நபர்கள் குறித்த ஆதனத்தை விற்பதற்கு முயற்சி செய்கிறார்கள் எனவும், அவ்வாறு கொள்வனவு செய்வதனால் வரும் நட்டங்களுக்கு நாம் பொறுப்பு இல்லை எனவும் இதனால் அறிவிக்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு
தொலைபேசி இல:077 9099 322

**வேலையாள் தேவை**

யாழ்நகரை அண்மித்த பகுதியில் உள்ள சைவ உணவத்திற்கு சப்ளை வேலைக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.

076 295 7750, 077 906 3036

(cs42838) (2. 6)

**பராமரிப்பாளர் தேவை**

யாழ். நகரையண்டிய பகுதியில் வீட்டில் தங்கியிருந்து வயது முதிர்ந்தவர் ஒருவரை பராமரிப்பதற்கு 45-60 வயதிற்குட்பட்ட ஆண் ஒருவர் தேவை. உணவு மற்றும் தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு:
0773 614 630

(CS18613) 1-6

**பணியாளர்களை இணைத்துக்கொள்ளல்**

நல்லூர் செட்டித்தெரு,
89 இல் அமைந்துள்ள திருவாசகம் முதியோர் இல்லத்தில் முதியோர்களை பராமரிப்பு வேலைக்கு பணியாளர்களான ஆண், பெண் இணைக்கப்படவுள்ளார்கள்

சம்பளம் : நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

077 934 9511, 077 336 0903

(cs 42735) (2.6)

**காணி விற்பனைக்கு**

ஊரெழு வடக்கு, பலாலி வீதி, வீரகத்திப் பிள்ளையார் கோவிலிருந்து 50 m தூரத்தில் அமைந்திருக்கும் 8 பரப்புக் காணி 2 பரப்பாக பிரித்து விற்கப்படும்.

076 940 1045

(cs.42755) (2.6)

**காணியுடன் வீடு விற்பனைக்கு**

ஊரெழு பகுதியில் வீட்டுடன் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

074 230 3643
077 978 9483

கரந்தன் வீதி, அம்மன் கோவிலடி,
ஊரெழு கிழக்கு.

(CS 18609) 1-6

**காணி விற்பனைக்கு**

யாழ். சாவகச்சேரி நகரத்தில் சிவன் கோயில் வீதியில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் A-9 வீதியில் இருந்து 200 M தூரத்தில், பஸ் நிலையத்திலிருந்து 300 M தூரம், ரெயில்வே ஸ்ரேசனில் இருந்து 150 M தூரத்தில்.

தொடர்புகளுக்கு:
077 6585 999
076 6583 621

**காணி விற்பனைக்கு**

யாழ். சுன்னாகம் - புன்னாலைக்கட்டுவன் பிரதான வீதியிலிருந்து 2ஆம் காணி 5 1/2 பரப்புக் காணி 2 பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

(சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 700M தூரம்

தொடர்புகளுக்கு:
077 911 6983
077 288 0152


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.